தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு புரட்டாதி • 1992



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தரிசனம்

பார்வை - 6



- காற்றும் மழையும் கடும் புயலும்...... என்ன செய்யும் எங்களை!
(தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத் தாக்குதலை எதிர்த்து)

- சந்ததி இன்றி ஓர் சரித்திரம் மலர்கிறது

- தமிழீழ காவல்துறை - வரலாற்றின் பிரசவம்.

- மரபு தழுவிய புதிய பாய்ச்சல் - ஆனையிறவு சமர்க்களம் (பிரத்தியேக இணைப்பு)

- தமிழீழத்தில், சமாதானக் கதவுகள் திறந்தே உள்ளது.
(பிக்குகளின் யாழ் விஜயம்)

ஒளியைத் தேடி.......
புலம் பெயர்ந்து வாழும் எமது மக்களின் வாழ்க்கைப் பதிவுகள்.

- கட்டைக்காடு - வெற்றிக்களம்


- ஆனையிறவு யுத்தம்.......
தமிழர் வரலாற்றில் புதிய அத்தியாயம்
தமிழர்களின் மரபுப்படையின் தோற்றமும், பலமும்
உரசிப்பார்க்கப்பட்ட பரீட்சைக்களம்

இவ்விடயங்களைத் தாங்கி வெளிவந்துவிட்டது
"தரிசனம்" பார்வை - 6

தொடர்புகட்கு:
"தரிசனம்"
S. MOHANATHAS,
9/11 BOULEVARD DU GENERAL FERRIE,
94100 SAINT MAUR, FRANCE.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இந்த இதழில்...


கவிதை

தாய்நிலம் ...... 03

சிறுகதை

"அவர் [illegible]த்தான்
எம[illegible]ில்
விருப்பமில்லையே" ...... 06

சிறப்புக் கட்டுரை:

காவற்துறையில்
பெண்களின் பங்கு ...... 12

"இந்தியா டுடே"யின்
வி[illegible]த்தனம் ...... 15

வீரம் விளையும் நிலம் ...... 22


பிரபாகரன் ...... [illegible]

விடுதலையின் பாதையில்
மாவீரர் மேஜர் பாரதி ...... 30

கடற்புலி ...... 44


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தாய் நிலம்

நேற்று
நாற்பது தடவைகள் வந்து போயின விமானங்கள்
வெடிமருந்தையும் இராணுவத்தையும்
அவர்களின் கொலைக் கருவியையும்,
அவை சுமந்து வந்தன.

ஒரு போருக்கான ஆயத்தத்தில்
இப்போது இராணுவம்;
எம்மைக் கொல்லும் இராணுவம்

நேற்றுப் போல இன்றும்
யுத்த முனைவில்
இரண்டு 'ஹெலி' களின் குறிதேடல்
நம் எல்லோருக்குமே வெறுப்பைத்தருகின்ற
என் குழந்தை.
"கோள் மூட்டி" எனக் கோபம் கொள்கிற
'சீப்பிளேன்'.......எல்லாமே
வானில், முகில்கள் சிதைய
சன்னங் கொண்டலைகின்றன.

குறியீடு, படிமம் மற்றும் உவமான, உவமேயத் தொடர்களில் எளிமையான சொற்களைக் கையாண்டு தனித்துவத்துடன் வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க கவிஞராக இயக்கச்சி கருணாகரன் வளர்ந்து வருகின்றார். இவரது கவிதைகள் இன்னும் நூலுருப்பெறவில்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எங்களின் வானத்தில்
பறவைகள் திசைகெட்டுப் பறக்கின்றன
சூரியன் சாம்பலாகின்றதே!

ஊரில்,
என்றும் நிமிர்ந்தே நிற்கின்ற பனைகளும் அதிர
நம் தலையின் மேலே,
புலன்கள் விறைப்பெடுக்கப் போகின்றன
போர் விமானங்கள்.

எங்கோ வெடிக்கும்
குண்டின் அதிர்வில்
முற்றத்துப் பூக்கள் உதிர்கின்றன
விழிகள் பிதுங்கக் குழந்தைகள் விழிக்கின்றன.

● ● ●

விடுதலைக் கருவியுடன், போரின் முகங்கொள்ள
போராளிகள் தயார்.
விடுதலை இச்சை ஓங்கி ஒலிக்கும்
உள்மனதின் கூவலில்
பொன்னொளி பரப்பும்
சுதந்திரப் போருக்கு
போராளிகள் தயார்.

நீங்களெல்லாம் வீதிகளில் திரிவீர்.
வெறும் வாய் பேசி
நீலம், பச்சை, சிவப்பு, வெள்ளை
என்ற வண்ணமாய்
நிறம் பார்த்தலைவீர்.

இந் நேரம் யுத்தம் மூண்டிருக்கலாம்
அல்லது எப்போதும் நிகழலாம்
பூவும் பிஞ்சுமாய்ப் பூத்திருக்கும்
முற்றத்து முருங்கை முறியும்
முழு நிலவுடைந்து சிதறும்
வெள்ளாப்போடு விறைப் பெடுக்கும் குளிரில்
நீர் விட்டு வளர்ந்த பயிர்
எரிந்த மணம் எங்கும் பரவும்.
அப்பு பத்திரமாய் அடைத்த வேலி,
உள்ளம் உவந்துருகித் தங்கை
வளர்த்த வெள்ளைப் பேடு,
வெள்ளாட்டுக்குட்டி இரண்டும்
குண்டொன்றின் குழியிலடங்கலாம்
குருரம், அந்நாட்களைத் தின்னும்.
வீடு திறந்திருக்கும் கூரையின்றி.
இவையல்ல நம் வாழ்வு

நீங்களெல்லாம் வீதிகளில் திரிவீர்
வார்த்தையின்றி துயர் சுமந்து
பேசாது மௌனித்து
இடம் விட்டகன்று.....

● ● ●

போரின் பிறகு.
வீசிய குண்டில் வீழ்ந்த முருங்கையைப் போல்
வேறெதுவும் புதிதாய்த் தளிர்க்கலாம்
உடைந்த வீட்டின் முகட்டை விடவும்
அழகாய் ஒரு குடில் இனியும் நிமிரலாம்
பனிபடிந்த காலையைப் போலப்
பிறகும் இனிதாய்
பழகிய நாட்கள் எழுந்து வரலாம்.

பொன் பரவிய மாலையில் புழுதியும் அழகாய்
கண்களில் தெரியும்; கைகளும் அளையும்
தோட்ட வெளியில் துளிர்க்கும் பயிர்கள்
நம்பிக்கை தரும் நாற்றென வேரோடும்
முறிந்த பனையின் அடியில் இளைய
முளைகள் எழுந்து முசவும் கூடும்.
வீசும் காற்றில் விசையுடன் ஏறும்
அலைகளின் எழும்பலில் எங்களின் படகுகள்.

யாதும் நிகழும் என்பதாகுக;
நாம் விரும்பாத போரின்பிறகு
யாவையும் புதிதாய் எழுவதாகுக.

ஆயினும்,
நிலம் வேண்டுமே; நிலம்
எனக்கு, உனக்கு, அவனுக்கு
நம் எல்லோருக்குமான நிலம்
தாய் நிலம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்

தமிழ்ப் பெண்கள் ஆய்வு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இந்த ஆய்வுநிறுவனம் இயங்கும்.

கிளிநொச்சியில் கடந்த பங்குனி மாதம் 7-8 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழ்ப் பெண்கள் தேசிய மாநாட்டின்போது பெண்கள் பிரச்சனை சம்பந்தமாக ஒரு ஆய்வு நிறுவனத்தை அமைப்பதென விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி தீர்மானித்தது. இது மகளிர் முன்னணியின் வேலைத் திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவும் இடம் பெற்றது.

காலம் காலமாக பல நூற்றாண்டுகளாக தமிழீழப் பெண்ணினம் சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பல்வேறு ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வருகின்றது. அரச பயங்கரவாத அடக்குமுறை ஒரு புறமும், தொடரும் போர்ச் சூழ்நிலையின் தாக்கங்கள் மறுபுறமுமாக பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறையை மேலும் தீவிரப் படுத்தியிருக்கிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகமான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கு தீர்வுகாணும் வகையில் வேலைத் திட்டங்களை அமைத்து மகளிர் முன்னணி செயற்பட்டு வருகின்றது. பெண்களின் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் வகையில் ஆக்க பூர்வமான வேலைத் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப் படுத்துவதனால் முதலில் பெண்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்த விஞ்ஞான ஆய்வின் அவசியத்தையும் தேவையையும் உணர்ந்தே ஒரு ஆய்வுநிறுவனத்தை அமைக்க மகளிர் முன்னணி முடிவெடுத்தது.

இந்த ஆய்வு நிறுவனத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் வருமாறு:

1) பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் சம்பந்தமான புள்ளிவிபரங்கள், தரவுகள், பட்டறிவு, விபரங்கள் ஆகியவற்றைச் சேர்த்துத் தொகுத்தல்

2) சமூகவியல் ஆய்வுக்கான பிரச்சனைகளை இனம் காணுதல். கோட்பாடுகளும் கருத்துருவங்களுக்கும் தெளிவான வரைவிலக்கணங்களை நெறித்தல். ஆய்வுமுறையை வகுத்தல், வேலைத் திட்டங்களின் செயற்பாட்டுத்தன்மையைப் பரிசீலனை செய்தல்.

3) தமிழீழப் பெண்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கை நிலையை ஆய்வு செய்து அறிதல்.

4) இந்த ஆய்வு நிறுவனம் தமிழீழப் பெண்கள் பற்றிய தகவல் மையமாகவும் செயற்படும்.

5) இந்த ஆய்வு நிறுவன சர்வதேசப் பெண்கள் ஆய்வு நிறுவனங்களுடனும், மற்றும் பெண் உரிமைக்காகப் போராடும் உலக மகளிர் அமைப்புகளுடனும் தொடர்புகளை அமைத்துச் செயற்படும். ●

# வீரசாதனை புரிந்த வேங்கைகளுக்கு தலைவர் பிரபா கௌரவிப்பு



வண்ணான்குளம் இராணுவ முகாம் தகர்ப்பில் மிகவும் திறம்படச் செயற்பட்ட போராளிகளைக் கவுரவித்து தலைவர் பிரபாகரன் பரிசில்களை வழங்கினார். போராளிகளான ஈழவன், சோதி, இன்பன், வாசுதேவன், தூயவன், சுயா, தூயமணி, ஊரான், சித்திரன், யாகசீலன், பாரதி ஆகிய 11 புலிப்படை வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. போராளியான ஈழவன் தலைவரிடமிருந்து பரிசுகளைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இரவு...... நேரம் ஒரு மணி இருக்கும்.

எங்கும் ஒரே இருட்டு. கும்மிருட்டு என்று சொல்வார்கள் அப்படித்தான்...... மின்மினிகள்கூட பயத்தில் பதுங்கிக்கொண்டன.

அந்த ஊரில் ஒரு நாய்கூட இல்லை........ இல்லை! இல்லை! இது சுத்தப்பொய்...... நிறையவே நாய்கள் இருந்தன....... ஒன்றல்ல இரண்டல்ல...... சில வீடுகளில் நாலைந்து நாய்கள், வேலிக்குக் கீழால் விடுப்புப் பார்க்கும்..... வெறுத்தால் பாய்ந்து கடிக்கும்......

**தனது எழுத்துக்களில் தனிமனித உணர்வுகளை மட்டும் மையாக ஊட்டாது முழு உலகுக்குமான மானிட வாழ்வின் அவலங்களை, தேவைகளை, மறுக்கப்பட்ட உரிமைகளை, நீதிகளை, ஆவேசமாக எதிர்க்கும் தன்மைகளை இவள் மையாக ஊற்றியிருக்கின்றாள்.**

# அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே...



மீன்காரன், ஐஸ்பழக்காரன், தும்புமுட்டாஸ் விற்பவன்.... சைக்கிளில் செல்லும்போது...... சில வீடுகளைக் கடக்கும்போது...... இதயம் வெடவெடக்க இரு கால்களையும் தூக்கி 'பாரில்' போட்டதுமுண்டு.

கறுப்பு, சிவப்பு, மாநிறம், கட்டைநாய், குட்டைவால் நாய், சடைநாய், சொறிநாய்..... பல இன நாய்கள்.... நன்றாகவே குரைக்கும்.

"நாய் கடிக்கும் கவனம்..." சில கேற்றுக்களில் இன்னமும் பலகைகள் தொங்குகின்றன. கட்டைகளில் இன்னமும் நாய்ச் சங்கிலிகள் கிடக்கின்றன..... ஆனால்.... நாய்களைத்தான் காணவில்லை.

ஒட்டுமொத்தமாக ஊரை விட்டு எங்கே போயிருக்கும்....? மனிதரில்லா இடத்தில் எமக்கென்ன வேலை என்று ஓடிவிட்டனவோ....? இருக்காது, அவை மனிதருக்கு முன்பே போய்விட்டன.

இயல்பாகவே நாய்களுக்கு வெடிச்சத்தங்கள் கெடிகலக்கும்..... இப்போதெல்லாம் நிறைய வெடிச்சத்தங்கள் கேட்கின்றன.

காதுக்குள் துப்பாக்கியை வைத்து அமுத்தினாற்போல்..... செவிப்பறைகள் அதிருகின்றன. சில செவிப்பறைகள் வெடித்துவிட்டன. அணுகுண்டேதான் வெடித்தாலும் இனி அவை அசையா.

எந்த ஓர் உயிரினமும் அங்கே இருப்பதாகத் தெரியவில்லை....

பெருமூச்சு...., தும்மல்...., இருமல்....., குறட்டை...., மூச்சையடைக்கும் சளியை உள்ளேயிழுத்து வாயால் கொர் என்று காறித்துப்பும் கரகரத்த ஒலி.... எதுவும் இல்லை.

கைகட்டி, வாய்பொத்தி காற்றுக்கூட கம்மென்று உட்கார்ந்துகொண்டது. காற்று வீசாதா பாலைவனம்.... அப்படியொரு அமைதி......

தெளிவாகக் கேட்கும் துப்பாக்கி வெடிக்கும் சத்தங்கள். ஒன்று... இரண்டு.... மூன்று..... ஒழுங்கு குலையாது சலனமின்றி எண்ணலாம்.

ஆயிரம்... இரண்டாயிரம்... மூவாயிரம்.... சீ.... இதைப்போய் யார் கணக்கெடுப்பார்கள்.....?

ஒன்றிரண்டு தெரியாத காலத்தில், ஒவ்வொரு ஒன்றிற்கும் சுவர்களில்.... ஏதாவது மரங்களில் குறியிடுவார்கள்.

இப்போதும் அப்படித்தான். துப்பாக்கியிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு குண்டுக்காகவும் சுவர்கள், மரங்கள், ஏன் மனிதர்களில் கூட துளைகள் போடப்படுகின்றன.

"ஐயோ..... ஓ....... ஓ........ ஓ......!"

துப்பாக்கிகளையும் துயருறச் செய்யும்... ஓர் தாயின் கொடிய கதறல்.... அடங்க ஒரு நிமிடம் எடுத்தது. என்ரை ராசா.... ஆ.... ஆ.... ஆ.....!, என்ரை

**கஸ்தூரி**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஐயோ.... ஓ...... ஓ...... ஓ... என்ரை பிள்ளையைச் சாக் கொண்டு போட்டாங்கள்...... என்ரை ராசா... ஆ..... ஆ...!

ஒரு நிமிடம் ஓடியது. மீண்டும் அதே அமைதி. குண்டுச் சத்தங்கள் மட்டும் தெளிவாகக் கேட்டன.

இலேசாக மிகவும் இலேசாக மழை தூறுகின்றது. காலை தொடக்கம் இப்படித்தான் இந்த மழை முக்கி, முனகிக் கொண்டிருக்கின்றது.

காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம்வரை நீண்டிருக்கும் தண்டவாளம் இருளில் மூழ்கி வெறிச்சென்றிருக்கின்றது.

ஆ...... ஆ..... என்னை விட்டுட்டுப் போயிட்டியே........ ஏ...... ஏ....... ஏ என்ரை ஐயோ..... ஓ...... ஓ....... ஓ"

மீண்டும் அதே கதறல் ஒலி இருட்டை பிழிந்து கலங்கவைக்கின்றது.

தண்டவாளத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஓர் மக்கி ஒழுங்கை. இரு மருங்கிலும் நீளத்திற்கு மதில்.... தொலைவில் கிழுவைவேலி வளைந்து செல்கின்றது. ஒழுங்கை முகப்பிலிருந்து ஐம்பதுயார் உள்ளே தள்ளி வலப்புறமாகச் செல்லும் ஓர் சிறிய ஒழுங்கை..... அதுதான் அந்தச் சத்தத்திற்கு

வறிய குடும்பம், பிள்ளைகளை வறுமையின் மத்தியில் மிகவும் கஸ்டப்பட்டே படிப்பித்தாள். இரண்டு பிள்ளைகளிலும் தாய் உயிரையே வைத்திருந்தாள்... பிள்ளைகளும் அப்படித்தான்.

"துப்பாக்கியைக் கண்டுபிடித்தவன் நாசமாய்போக.....! ஏன் தான் இப்படி ஒரேயடியாக வெடித்துக் கொட்டுகின்றான்." தொடர்ந்து நாலைந்து நாட்களாக ஒரே சூட்டுச் சத்தம்...... மரண ஓலம்..... வரவர கிராமங்கள் வெறிச்சோடிக்கொண்டே வருகின்றன. ஒன்றன்பின் ஒன்றாக ஏவப்படும் செல்கள்..... கண்ட இடமெல்லாம் விழுந்து வெடித்தன. மக்களைக் கொன்றன.



தூரத்தில் ஓர் இரைச்சல்.........!

'ரெயின்' வருகிறது.

இல்லை....! இல்லை! நிச்சயமாக அது வராது. அப்படியானால் அந்தச் சத்தம்.......?

உயிரைப் பறிக்கும் ஓர் கனரக வாகனம்.... காலனை ஏற்றி வருகின்றது.

இரைச்சல் உம்..... உம் என்று இரைச்சலாகி நீண்ட நேரத்தில் ஓய்கிறது.

"ஐயோ... ஓ.... ஓ..... ஓ என்ரை ராசா.... ஆ.... ரிய...... அந்த வீட்டிற்குரிய பாதை.

●●●

அந்த வீட்டில் மூன்றே ஜீவன்கள். தாயும் இரண்டு பிள்ளைகளும்.... மூத்த மகள் இருபத்திநான்கு வயதிருக்கும்..... மருத்துவக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவி. அடுத்தது மகன். தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்.

"இந்தப் பிள்ளை எங்கை கிடந்து தவிக்குதோ....? ஒழுங்கா வீட்டில இருந்திருக்கலாம்.... கண்டறியாத ஆஸ்பத்திரிப் படிப்பு" வாசலில் இருந்து மகளுக்காக காத்துக் காத்து அலுத்துக்கொண்டாள். மகனை அனுப்பித் தேடவும் பயமாக இருந்தது. தானே புறப்பட்டாள்.

தொலைவில் வாகனங்கள் விரைந்து உறுமின. இதயம் வேகமாக அடித்தது. உடல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முழுவதும் இனம்புரியாத பயம் ஓடிப் பற்றிக்கொண்டது. "ஏன் தான் இப்படி இரைந்து ஓட்டி உயிரை எடுக்கிறார்கள்....? சாதாரணமாகப் போகலாம் தானே........?"

இரைச்சலைத் தொடர்ந்து அவலக்குரல், இரைச்சலையும் மீறிக் கேட்டது...... வரவர அதிகரித்தது.... "ஒரு கிராமமே கத்துகிறதே" கால்கள் மேலே நடக்க மறுத்தன. அதிலேயே நின்று கொண்டாள்..... உடலெல் லாம் நடுங்கியது..... ஒரேயடி யாக வியர்த்தது.

அப்போதுதான் அந்த இடி விழுந்த செய்தி அவள் காதில் விழுந்தது. இதைவிட யாராவது அவளைச் சுட்டோ, வெட்டியோ அதில் கொன்று போட்டிருக்க லாம்.

அந்த இரைச்சலின் பின்ன ணியில் கிட்டத்தட்ட ஐம்பது உயிர் கள் நெரித்துக் கொல்லப்பட்டன. பெண்கள், குழந்தைகள், முதி யோர், கர்ப்பிணிகள் என பலதரத் தினர்..... அந்தத் தாயின் பிள் ளையும் நெரிந்து போனாள்.

அதெப்படி அந்த இரைச்ச லில் அவ்வளவு பேர் இறக்க முடியும்? தன்பாட்டில் றோட்டால் வாகனம் போயிருக்கும்...... இவர்கள் குறுக்கே போயிருப்பார் கள். நெரித்திருக்கும், இறந்திருப் பார்கள். இருக்காது அவர்கள் தம் பாட்டில் றோட்டால் போயிருப்பார் கள். வாகனம்தான் குறுக்கே வந் திருக்கும்..... வேண்டுமென்றே நெரித்திருக்கின்றது. குறுக்கே போய் குழிபறிக்கிற வாகனம். கொடிய மிருகம்.

இரண்டு மூன்றுதடவை கண்ணை விழித்து மீண்டும் மயங் கிப் போனாள்..... யாரோ ஒரு புண்ணியவான் தண்ணீர் தெளித்து மயக்கத்தைப் போக்கினான். எழுந்தவள் நெஞ்சிலும், தலை யிலும் அடித்து ஒவென்று அழு தாள்..... மண்ணில் புரண்டு கத் தினாள்.... எழுந்து ஓட்டமும் நடையுமாக வீட்டைநோக்கிச் சென்றாள். நெஞ்சிலும் தலையி லுமாக மாறிமாறி அடித்துக் கொண்டு போனாள்.

மகனுக்குச் சொல்லப் போகின்றாள்.... இல்லை.....

கிணற்றில் விழுந்து சாகப் போகி றாள்...... ம்...... ம்..... யாரி டமாவது மன்றாடுவாள் மகளின் பிணத்தை வீட்டில் கொண்டுவந்து தரும்படி.

கேற்றைத் தள்ளிவிட்டு ஓடினாள்... வாயில் கதவோடு தலையையடித்துக் கதறினாள். விழுந்து புரண்டு அழுதாள்......

ஒருநாள், இரண்டு நாள்..... இப்படித்தான் கத்தி னாள். வீட்டில் மரணஓலம்.... ஊர் முழுவதும்கூட அப்படித்தான் ஓலமிட்டது. பாவம் மகன் தாயோடு சேர்ந்து அவனும் அழு தான். வெளியே எங்கும் போகமு டியாது..... இந்த நிலையில் தாயைவிட்டுவிட்டு எப்படிப் போவான்.... வீட்டிலேயே இருந் தான். தாய்க்குத் தேநீர் வைத்துக் கொடுத்தான். றொட்டி சுட்டுக் கொடுத்தான். உண்ண மறுத்து விட்டாள்...... அழுதுகொண்டே யிருந்தாள். ஊரில் யாருமே இல் லாததுபோல் இருந்தது. ஒரு சிலர் திரிந்தார்கள்.

மூன்றாம்நாள் அதே வெடிச் சத்தங்களோடுதான் விடிந்தது. வளவு முழுவதும் ஷெல் விழுந்து மரங்கள் முறிந்து கிடந்தன. வீட் டில்தான் இன்னமும் விழ வில்லை. எப்படியும் வீழ்ந்துவி டும்....... ஒன்பது மணி இருக் கும்..... வீடு நொருங்கிக் கொட் டியது. எங்கும் ஒரே புகைமண்ட லம்... ஒரு நிமிடம்....... இரண்டு நிமிடம்..... மெதுவாகக் கண்ணை விழித்தாள். குசினியில் வீழ்ந்திருக்க வேண்டும். ஒரே புகையாக இருந்தது. எதுவும் தெரியவில்லை..... மகனைத் தேடினாள், காணவில்லை. கத் திக் கூப்பிட்டாள், பதிலே இல்லை.... கூச்சலிட்டாள்..... இதயம் படபடவென்று அடித்தது. குசினிப்பக்கம் ஓடினாள்..... அங்கே மகன், இரத்த வெள்ளத் தில் கிடந்து துடித்தான். கத்த நினைத்தவள்.... சத்தம் வெளி யேவரவில்லை.... தலையைச் சுற்றுவது போலிருந்தது..... இர ண்டு விநாடி....... மூன்று விநாடி...... அப்படியே மயங்கி மகனின் அருகில், தரையில் வீழ்ந் தாள்.

## இறப்பற்றோர்

வெட்டப்பட்ட கரங்கள்
வேகமுடன் வளர்கின்றன
முறிக்க முறிக்க
முளைவிடும்
மூர்க்கமான செடியைப் போல்,
கத்தரிக்கப்பட்ட கரங்கள்
கணுக்களைப் பிரசவிக்கின்றன.
சிதைக்கப்பட்டவைகள்
சிவப்பாக வெடிக்கின்றன.

நெரிக்கப்பட்ட குரல்வளைகள்
நெருப்பு வரிகளில்
முற்றுகையை எதிர்த்து
முழக்கமிடுகின்றன.......

தடுப்பட்ட,
சுவாசப்பைகள்
ஆக்கிரமிப்பாளனை
அவிப்பதற்கு
விடுதலை மூச்சை
வெம்மையாக வெளியேற்றுகின்றன.

இறந்து போனான்
என எதிரியவன்
எக்காளமிடுகையில்,
பிணங்கள் இங்கே
பிறவி எடுக்கின்றன.

எதிரிகளே.....
துடிக்கப் பதைக்க
வதைத்துக் கொல்லுங்கள்,
அதனாலென்ன!
துண்டிக்கத் துண்டிக்கத்
துளிர்ப்பார்கள் வீரர்கள்.

எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள்
ஓடும் வரை,
எங்கள் வீரர்க்கு
இறப்பேயில்லை.

உரிமை வேண்டி
உயர்ந்த கரங்கள்
ஆக்கிரமிப்புகளுக்கு
அடிபணிந்து போகாது!

ஆனையிறவுச்சமரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட கப்டன் கஸ்தூரியினால் இறுதியாக எழுதப்பட்ட(எழுதி முடிக்கப்படாத கவிதை வரிகள் இவை)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாலை நான்கு மணியிருக்கும். அவளுக்கு நினைவு திரும்பியது. சுயநினைவு என்று சொல்ல முடியாது. கண்கள் விழித்துக் கொண்டன.


யாரோ மனிதர்கள் இங்கே உயிரோடு நடமாடியிருக்கின்றார்கள்...... இல்லாவிட்டால் அவள் எப்படி அந்த விறாந்தைச் சுவரோடு சாய்ந்து கிடக்க முடியும்......? குசினியில் இரத்த வெள்ளத்தில் கிடந்த அவளின் மகன்..... அந்தப் பிணம்..... வெள்ளைத்துணியால் போர்த்தப் பட்டு அந்த இரட்டை வாங்கில் கிடத்தப்பட்டிருக்க முடியும்.........?

இப்போது அவளை யாராவது துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டும்.......! உச்சியில் ஒரு ஷெல் விழுந்து சிதற வேண்டும்.......! இனி அவள் சுவாசிக்கக் கூடாது....! எப்படியாவது இறக்க வேண்டும்........ உடனடியாக இறக்க வேண்டும்.........!

இல்லை.....! அவள் சாக மாட்டாள். அவளுக்குச் சாக வராது....... அதெப்படி இந்த உலகில். அவள் அவ்வளவு இலகுவாகச் சாவது சாத்தியப்படும்.....? நன்றாகக் கத்த வேண்டும்...... தலையைப் பிய்த்து....... மண்டையை மோதி நெஞ்சு வெடிக்கக் குளற வேண்டும்...... அதுவரைக்கும் அவள் சாகமாட்டாள்....... அவளுக்குச் சாவு வராது.

● ● ●

இப்போது அதே அமைதி..... அதே சூட்டுச் சத்தம்..... ஷெல் சத்தம்...... நேரம் அதிகாலை நான்கு மணி இருக்கும்...... விடியப் போகின்றது. வெளிச்ச வீடுபோல் இருந்த அந்த வீடு இருண்ட கண்டமாகிக் கிடந்தது. ஊரே உம்.... என்று அழுது வடிகின்றது. கதவுக்கு நேராக மேலே அந்த 'டியூப்லைட்' எரியாமல் வெறுமனே வெள்ளையாய் கிடக்கின்றது. பிணத்தின் தலைமாட்டில் மௌனமாக அழுதுகொண்டிருக்கும் அந்தக் குத்து



**கஸ்தூரியின் பேனாவிற்கு இந்த சக்தி இருந்ததென்றால் அதற்கு காரணம், இந்த மண்ணின் உயிர் வாழ்விற்காக எல்லைகளில் அவளது துப்பாக்கியும் சத்தமிட்டிருக்கிறது.**

**இருபது வருட போராட்ட வரலாற்றில் முழு உலகையும் எம்மை நோக்கிப் பார்க்க வைத்து ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய ஆனையிறவு முகாம் தாக்குதலில் இவளது துப்பாக்கி இறுதியாகச் சத்தமிட்டது.**

விளக்கு வெளிச்சம்..... தொலைவில் நின்று பார்த்தால் அதுவும் தெரியாது.

இப்போதும் அந்தச் சுவரோடுதான் இருந்தாள். கையை முழங்காலில் வைத்து தலையைச் சரித்து இடது கையால் தாங்கி சுவரின் மேற்புறத்தையே, வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்....... முன் தலைமுடி கலைந்து விழுந்து நெற்றியிலேயே கிடந்தது. கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது...... கன்னங்கள் பிசுபிசுத்து மினுங்கிக் கொண்டிருந்தன......... விசும்பலூடே மூக்கிலிருந்து வடியும்சளியைச் சீறி வீசிவிட்டு கையை சீலையிலே துடைத்தாள். மீண்டும் தலையிலே கையைவைத்துக் கண்ணை மூடிக்கொண்டாள்.

வாங்கிலிருந்த பிணத்தின் நெஞ்சிலும் காலடியிலும் நாலைந்து போகன்விலாப் பூக்கள் சிதறிக்கிடந்தன. தலைமாட்டில் ஒரு செவ்வரத்தம் பூ வாடிக்கிடந்தது.

சிறிது நேரம் அமைதி....... துப்பாக்கிச் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. ஐந்து நிமிடம்..... பத்து நிமிடம்.... அவள் உதடுகள் வேதனையால் துடித்துப் பிளந்தன...... உடல் குலுங்கியது.....

விம்மலினூடே அழுகை வெடித்து வெளிவந்தது. குலுங்கிக் குலுங்கி அழுதாள்...... தலையை இருபுறமும் ஆட்டிப் புலம்பினாள்..... சுவரோடு மோதினாள்...... அடிக்குரலில் பலமாக அழுதாள்.

கண்ணை விழித்து சிறிது நேரம் மகனின் பிணத்தேயே பார்த்தாள்.... தலை அவள் பக்கமாகச் சரிந்து திரும்புவது போலிருந்தது..... உற்றுப் பார்த்தாள். உதடுகள் லேசாகப் பிரிய முயற்சித்துப் புன்னகைப்பதுபோல் பட்டது. இதயம் படபடவென்று அடித்தது. குந்தியிருந்தவள் இரு கைகளையும் முன்னே ஊன்றி நுனிக்காலில் எம்பி நன்றாக உற்றுப் பார்த்தாள்.

எல்லாமே பிரமை..... நீண்ட பெருமூச்சினுடே விம்மலாக அழுகை வெடித்தது. குலுங்கிக் குலுங்கி அழுதாள். தலையில் அடித்தாள்..... மீண்டும் சுவரோடு சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

தொலைவில் பயங்கரச் சத்தத்துடன் அடுத்தடுத்து நான்கு குண்டுகள் வெடித்து ஓய்ந்தன. கிணற்றடிப் பக்கமாக ஒரு ஷெல் பெரிய சத்தமாக வெடித்து சிதறியது. தொடர்ந்தும் அக்கம் பக்கமாக நாலைந்து ஷெல் வெடித்தது...... வீடு அதிர்ந்தது..... யன்னல்கள் சிதறிக் கொட்டின.

ஓடிச்சென்று கதவை அடித்துச் சாத்தினாள்...... நடந்து வந்து வாங்கருகில் நின்றாள்..... மகனையே பார்த்தாள்.... தலைமாட்டில் கிடந்த வாடிய செவ்வரத்தம் பூவை எடுத்து நெஞ்சில் கழுத்துக்குக் கிட்ட வைத்தாள். கால் மாட்டில் வந்து துணியை விலக்கிக் காலைத் தொட்டுப் பார்த்தாள்..... குளிர்ந்து விறைத்திருந்தது.

மூலையில் மேசையருகில் கிடந்த மேசையில் மகள் ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். முகம் மலர மேசையை நோக்கி ஓடினாள்..... எல்லாமே பிரமை.... கதிரை வெறுமனே சும்மா கிடந்தது......

ஒரே தாகமாக இருந்தது.... ஏதாவது குடிக்கவேண்டும் போல......... குசினிக்குள் சென்று அடுப்பை மூட்டினாள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வாளியில் தண்ணீர் இல்லை.....

அடுப்பு நன்றாக எரிந்தது. கேற்றிலில் இருந்த சிறிதளவு நீரையே கொதிக்க வைத்தாள்.

"அம்மா... ஆ.... நான் போட்டு வாறன்...." மகளின் குரல் கேட்டது. விறாந்தைக்கு ஓடிவந்தாள்.

எல்லாமே பிரமை....

அங்கே... மகனின் பிணம் மட்டுமே.... தலைமாட்டில் அந்தக் குத்துவிளக்கு மட்டும் மௌனமாக அழுதுகொண்டிருந்தது.

தலையில் அடித்து 'ஓ' என்று கத்தினாள். சிறிது நேரம் அப்படியே செய்தாள்.

குசினியுள் சென்று ஓர் கரி பிடித்த தட்டில் கொஞ்சம் தணல் கொண்டு வந்து வாங்கின் ஓரமாக மகனின் கால்மாட்டில் வைத்தாள். சாமி அறையுள் சென்று ஒரு பேணியோடு திரும்பி வந்தாள்..... அதனுள் இருந்த தூளை அள்ளி தணல் சட்டியில் போட்டாள்.

அடர்த்தியான புகை வாசனையோடு மேலே எழுந்தது. இரண்டு கைகளையும் புகையின் மேல் பிடித்து கைகளைச் சூடாக்கினாள். பாதங்களை மூடியிருந்த துணியை விலக்கி சூடேறிய கைகளால் பாதங்களை உரசினாள். இடக்காலின் மேற்பாகத்தை இடக்கையால் பிடித்துக் கொண்டு வலக்கையைச் சூடாக்கி அடிப்பாகத்தை நன்றாக மிகநன்றாகத் தேய்த்தாள். வலப்பாதத்திற்கும் அப்படியே செய்தாள்.

திடீரென்று சூட்டுச் சத்தங்கள் நின்றன.... மயான அமைதி.... உலகமே இறந்துவிட்டதுபோல் ஓர் அமைதி.... எழுந்து வெளியே வந்தாள்..... இருட்டை வெறித்தாள்.

அமைதி அவளை என்னவோ செய்தது...... சூட்டுச் சத்தம் இல்லாது பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. வெடிச் சத்தங்களைக் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும் போலிருந்தது..... வெடிச்சத்தம்! வெடிச்சத்தம்! அவளுக்குக் கத்த வேண்டும் போலிருந்தது..... சீ.... என்ன படைவீரர்கள் இவர்கள்.... இப்படி ஒரேயடியாக நிறுத்திவிட்டார்கள்.

திரும்பி மகனைப் பார்த்தாள்..... அவன் புன்னகைத்தபடி படுத்திருந்தான்......

சீக்கிரம்.... சீக்கிரம்....

அவளுக்கு வெடிச்சத்தம் வேண்டும். ஒரு வேளை.... இந்தியப் படைக்காரன் மலங்கழிக்கப் போயிருப்பான்...... அதெப்படி எல்லோரும் ஒரே நேரத்தில்.....? தலைவன் ஏதாவது கட்டளை பிறப்பித்திருப்பான்..... சுடுவதை நிறுத்திவிட்டுக் கேட்கிறார்கள் போலும்.....

அமைதி அவளுக்குப் பயத்தை உண்டுபண்ணியது. தூரத்தே ஒரு 'டோச்' வெளிச்சம் தெரிந்தது.... யாராக இருக்கும்.....? சிறிது நேரம் நிற்கிறது. பின் நடக்கிறது.

---

பயங்கரங்களையே எதிர்கொண்டு வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன் கருதி அவர்கள் மீது நம்பிக்கை வைத்து பொருளாதார உதவிகளை வழங்கக்கூடிய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து சகல வளங்களையும் உபயோகித்து முழு வீச்சில் செயற்பட்டால் மட்டுமே போர்க்கால நெருக்கடிகளில் அல்லலுறும் மக்களின் வாழ்க்கை நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி நெருக்கடிகளை வெற்றி கொள்ளலாம்."

இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சுயசார்பு தொழில் முயற்சி நிதியம் தொடர்பாக வெளியிட்டுள்ள சிறு கைநூல் ஒன்றில் தெரிவித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அதன் சுயசார்பு தொழில் முயற்சி நிதியத்திலிருந்து இடம் பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மாவட்டத்தில் 4919 கடன் உதவிகளை வழங்கியுள்ளது.

நடைமுறை முதலீட்டு நிலுவை 30. 04. - 1992 வரை அறுபது இலட்சம் ரூபாவுக்கும் மேலாகவும், சுழற்சி முறையில் வழங்கிய தொகை ஒரு கோடி எட்டு இலட்சம் ரூபா வரையும் வழங்கப்பட்டுள்ளது. சேமிப்பு மிகுதியாக எட்டு இலட்சத்து எழுபத்தெட்டாயிரம் ரூபா பயன்பெறுவோரால் கைவிடப்பட்டுள்ளது.



## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

## சுயசார்பு தொழில் முயற்சி நிலையம்

"பொருளாதார தொழில்நுட்ப வல்லுநர்கள் சூழ்நிலைக்கும் நாட்டுக்கும் ஏற்ற தொழில்களை இனங்காண்பதில் உதவிகள் வழங்க முன்வரவேண்டும்."

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


திடீரென்று சூட்டுச் சத்தங்கள்..... எல்லாத் திக்கிலும்....... அவளுக்கு ஒரே ஆனந்தம்..... தூரத்தே வந்த 'டோச்' வெளிச்சத்தைப் பார்த்தாள். அது வந்த பாதையால் திரும்பி ஓடிக்கொண்டிருந்தது. அவளுக்குச் சிரிப்பு வந்தது......

இடப்புறக் கழுத்தில் ஏதோ ஊர்வது போலிருந்தது. மார்பிலும் இடுப்பிலும்கூட அப்படித்தான் இருந்தது......

அவளுடலில் குண்டுகள் பாய்ந்துவிட்டன..... அவளுக்கெங்கே அது விளங்கப் போகின்றது......? பாழாய்ப்போன குண்டுகள்.....!

கழுத்தைத் தடவிப் பார்த்தாள்.... ஈரமாக இருந்தது.... "ஏன்தான் இப்படி வியர்த்துத் தொலைக்கின்றது.....!" பிசுபிசுத்தது. உள்ளே வந்து வெளிச்சத்தில் பார்த்தாள்.... கையெல்லாம் சிவப்பாக.... சீலையில் துடைத்தாள்.... திரும்பவும் கழுத்தைத் தடவினாள்.... மீண்டும் கையெல்லாம் இரத்தம்.... இடுப்பைத் தொட்டுப் பார்த்தாள். துவாரம் போலிருந்தது. சுண்டுவிரல் உள்ளே சென்றது.

எங்கோ தொலைவில் சேவல் கூவுவது கேட்டது. வாசலருகில் வந்து நின்றாள். வியப்பாக இருக்கின்றதே.....! இந்தப் பயங்கர இருட்டில்..... மயான அமைதியில்...... சூட்டுச் சத்தங்களுக்கு மத்தில்..... இந்தச் சேவல் ஒளித்திருந்தது.....? பயமில்லாமல் எவ்வளவு துணிச்சலாகக் கூவுகிறது.......! மனிதர்கள்கூட போட்டது போட்டபடி.... ஊரைவிட்டே ஓடிவிட்டார்கள். துணிச்சலான சேவல்...... சாவைப்பற்றி அஞ்சாது தன் கடமையைச் செய்கின்றது.

விடியலுக்காகத்தானே அது கூவுகிறது......? அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே.......! நாளை இச் சேவலை நிச்சயம் இந்தியப்படைக்காரர்கள் கொன்றுவிடுவார்கள்.......

இங்கேகூட கருஞ்சிவப்பில் ஒரு கொண்டைச் சேவல் திரிந்தது..... எங்கே செத்ததோ தெரியாது........! நாலைந்து நாட்களுக்கு முன் ஒரு குட்டிநாய் துரத்த கோவென்று ஓடிச்சென்று வைக்கோல் பட்டடைக்குள் புகுந்துகொண்டது...... பயந்த கோழி.

ஒரு நாய் இரண்டு பூனை..... ஒன்றைக்கூட காணவில்லை.......! இரவில் இவன் மார்பில்தான் அந்தச் சிவலைப் பூனை படுத்திருக்கும்.... இப்போது அவன் தனியாகக் கிடக்கின்றான்....... பூனை எங்கே தொலைந்ததோ தெரியவில்லை.

அவளுக்கு ஒரே களைப்பாக இருந்தது...... தூங்க வேண்டும் போல் ஒரே மயக்கமாய் வந்தது. அவசரமாக வெளியே போய்வர நினைத்தாள்...... முடியவில்லை; தூக்கம்......... தூக்கம்...... ஒரே தூக்கம்....... பாய்கூட வேண்டாம்........ விழுந்துவிடுவாள் போலிருந்தது. தட்டுத் தடுமாறி வாங்கருகில் வந்தாள்..... வீடு முழுவதும் இரத்தம் கோடு போட்டது.

மகனைப் பார்த்தாள்....... புன்னகையுடன் படுத்திருந்தான்..... இறந்து கிடந்தான்...... தலையைக் கோதிவிட்டாள். கை வெளியே தெரிந்தது.... உள்ளே தள்ளி நன்றாக மூடினாள்... அது விறைப்பாக இருந்தது. கால்மாட்டில் வந்து நின்றாள். பூக்களைக் கையில் எடுத்துப் பார்த்தாள். மகளின் நினைவு வந்தது..... இருந்த இடத்திலேயே பூக்களை மீண்டும் வைத்தாள்..... அவை வாடாமல் இருந்தன.

தூக்கம் பிய்த்தெடுத்தது...... அவளையறியாமலே கீழே இருந்துவிட்டாள். தாகமாக இருந்தது. படுத்துக் கொண்டாள்.......... இல்லை! விழுந்துவிட்டாள்.... கண்கள் மூடிக்கொண்டன. உடனேயே தூங்கிப் போனாள். மகனைப் போல...........

• • •




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழீழக் காவற்துறையில் பெண்கள்

எதிரியிடமிருந்து மீட்டெடுக்கப்பட்ட எம் தாயக மண்ணில் ஆட்சி அமைப்புக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எமது விடுதலை இயக்கம் மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய ஆட்சி அமைப்புக்களின் ஒரு அங்கமாகவே தமிழீழக் காவல்துறை உருவாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்டம் நடைபெறுகின்ற எல்லா நாடுகளையும் போல, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஆட்சி அமைப்புக்களை உருவாக்குகின்ற விடயத்தில் நாம் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை உயர்ந்த கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் இவ் அமைப்புக்கள் நிறுவப்படவேண்டும் என்பதில் மிகவும் கவனமெடுத்து வருகின்றோம். இந்த அடிப்படையிலேதான் தமிழீழ காவல்துறை உருவாக்கப்படுகின்ற போதே சமகாலத்தில் பெண்களையும் இதில் இணைத்துக் கொண்டோம். காவல்துறை உருவாக்குகின்ற போதே அதில் பெண்களை சமகாலத்தில் இணைத்துக் கொள்ளுதல் என்னும் நிகழ்வானது தமிழீழ வரலாற்றுக்கு மட்டும் உரித்தான தனிச்சிறப்பான அம்சமாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எங்கும் காவல்துறை ஆரம்பிக்கப்பட்டு பல்லாண்டு காலத்துக்கும் பின்னரே பெண்கள் மிகவும் குறைந்த அளவிலே இணைக்கப்பட்டனர். ஒரு சில காவல் பணிமனைகளில் மட்டும், ஆண் அதிகாரிகளின் கீழ் பணிபுரிகின்ற ஓர் நிலைமையை மட்டுமே அங்கு நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அதுவும் எந்தவிதமான அதிகாரமுமற்ற நிலையில் பெண்களை கைது செய்தல் போன்ற ஒரு சில தேவைகளுக்காகவே காவல்துறையில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

தமிழீழ காவல்துறையில் பெண்களின் இணைவு என்பது இது போன்ற எதிர்பாராத தேவைகளுக்காக உருவாக்கப்பட்டதொன்றல்ல. சமூகத்திலும் ஆட்சியமைப்பதிலும் பெண்களுக்கு சமமான ஒரு பங்களிப்பை ஏற்றுக் கொண்ட உயரிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலேயே தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டது.


இந்த நிகழ்வுக்கு ஓர் வரலாற்றுப் பரிணாமம் உண்டு. எமது தாயக விடுதலைக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வீரம் செறிந்த விடுதலைப் போராட்டமும் இந்த விடுதலைப் போரை நடத்திக்கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகள் இயக்கமும் எமது மண்ணிலே பாரிய மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றன. தேசிய விழிப்புணர்ச்சியுடன் சேர்ந்து சமூகத்தில் புரையோடிக்கிடக்கின்ற பிற்போக்குத்தனமான எண்ணங்களுக்கு எதிராகவும் இங்கே பெரியதோர் போராட்ட உணர்வை உருவாக்கிவிட்டிருக்கிறது. இத்தகைய போராட்ட உந்துதலினால் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சியே பெண்கள் தேசிய விடுதலைப் போரிலே பாரிய அளவில் இணைந்துகொள்வதற்குரிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டிருக்கிறது.

தேசிய விடுதலைப் போரில் பெண்களின் பங்களிப்புக்கூட ஏனைய நாடுகளினின்றும் வேறுபட்ட வகையில் சிறப்பான அம்சங்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



களைக் கொண்டதாக எமது தேசத்தில் விளங்குகிறது.

பல நாடுகளில் இராணுவத்தில் பெண்கள் ஒரு தனிப்படைப்பிரிவில் இருப்பதில்லை. போர்க்களங்களில் மட்டும் இவர்கள் இராணுவத்திற்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு அழைக்கப்படுகின்றவர்கள் கூட எதிரிக்கு எதிராக ஆயுதம் எடுத்துப் போராடுவதில்லை. காயப்பட்டவர்களைத் தூக்குதல் மருத்துவ சேவை செய்தல், போரிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு உணவு விநியோகித்தல் உட்பட சகல பின்புல வேலைகளிலுமே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். போரிடும் பணியில் இவர்கள் இணைக்கப்படுவதாய் இருந்தாலும் ஆண்களுடன் ஒருவர் மட்டும் பணியாற்றும் விதத்தில் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ரஷ்யாவில் ஒரேயொரு பெண்தான் இராணுவ உயர் அதிகாரியாக இருந்திருக்கிறார்.

புரட்சிகரமான போராட்டங்கள் நடந்த நாடுகளில் கூட போராட்ட வேளையில் மட்டும் பெண்களின் பங்களிப்பு முக்கியப்படுத்தப்பட்டது. போராட்டம் வென்றபின் மீண்டும் பெண்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.

இந்த நிலை எமது மண்ணில் இல்லை. அந்நிய ஆக்கிரமிப்பை உடைத்தெறிவதற்கான தேசிய விடுதலைப் போராட்டத்திலே இணைந்துகொண்ட பெண்கள் சகல செயற்பாடுகளிலேயும் ஆண்களுக்கு சரிநிகராக நின்று சாதனை படைத்து வருகின்றனர்.

பெண்களின் முக்கியத்துவத்தையும் அவர்களின் பங்களிப்பையும் சகல நிலைகளிலும் எமது விடுதலை இயக்கம் வெளிப்படுத்தி நிற்கின்றது. எமது விடுதலை இயக்கத்தின் இத்தகைய உயரிய கொள்கைத் திட்டமும், அதனால் தமிழீழப் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட பாரிய விழிப்புணர்ச்சியும் தமிழீழ காவல்துறையில் பெருமளவு பெண்கள் இணைக்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

தமிழீழ காவல்துறையினருக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட போது ஆண்களும் பெண்களும் ஒன்றாகவே அனைத்துப் பயிற்சியிலும் ஈடுபடுத்தப்பட்டனர். பயிற்சி வழங்கல், பொறுப்பு நிலையங்களை பகிர்ந்தளித்தல், வேதனம் வழங்கல் என்ற எந்த ஒரு நிலையிலும் ஆண்களோடு சமமான நிலையிலேயே பெண்கள் வைத்துப் பார்க்கப்பட்டனர்.

காவல்துறையில் பெண்களை இணைத்தது தொடர்பாக தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் கருத்துத் தெரிவிக்கையில் எந்த ஒரு நிர்வாகமும் பெண்களின் பங்களிப்பு இல்லாமல் பூரணமடையாது என்றார்.


மேலும் தெரிவிக்கையில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பயிற்சி, சமமான அறிவூட்டல் என வேறுபாடற்ற வகையிலேயே பயிற்சி வழங்கப்பட்டது என்றும், இதன்போது ஆண்களுக்கு நிகராக பல இடங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தியிருந்தார்கள் எனவும் தெரிவித்தார். திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு விசேட பயிற்சி கொடுக்கப்பட்ட ஒரு பெண்தான் கோப்பாய் காவல் பணிமனையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ காவல்துறையில் பெண்கள் இணைக்கப்பட்ட விடயமானது பழமைவாதக் கோட்பாடுகளுக்குள் ஊறிப்போன எமது சமுதாயத்தில் நடைபெற்ற ஓர் புரட்சிகரமான நடவடிக்கையாகும்.



வீட்டைவிட்டு பெண் வெளியே தலைகாட்டுவது தவறு என்ற தவறான பார்வை இங்கே உடைக்கப்பட்டிருக்கிறது. ஆண்களுக்கு நிகராக சகலதுறைகளிலும் பெண்களால் செயல்படமுடியும் என்ற மிகப் பெரிய நம்பிக்கையுடன் தமிழீழ காவல்துறையில் பெண்கள் இணைக்கப்பட்டிருக்கின்றனர். சட்டம், ஒழுங்கைப் பேணவும், நீதியை நிலைநாட்டவும், பெண்கள் தனித்துச் செயல்படுகின்ற தன்மையை தமிழீழ காவல்துறையில் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழீழ காவல்துறையில் பெண்கள் இணைக்கப்பட்ட இந்நிகழ்வானது இன்று எமது சமுதாயத்திலே பெண்கள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சனைகளுக்கு தீர்வுகளை இலகுவாக செயற்படுத்தக்கூடிய ஒரு களத்தை உருவாக்கித் தந்திருக்கிறது. ஆணாதிக்க வன்முறைக் கொடுமைகளுக்கெதிராகவும், பெண்கள் தாம் சமூகத்திலே எதிர்கொள்கின்ற நெருக்கடிகளுக்கெதிராகவும் நீதியானதோர் தீர்வைத் தேடிக்கொள்ள காவல்துறைப் பெண்கள் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றனர்.

பெண்ணுரிமைப் போராட்டத்தில் இது ஓர் வளர்ச்சி நிலையைக் காட்டி நிற்கிறது. இத்தகைய களத்தை அச்சாணியாகக் கொண்டு தமது வாழ்வை மேம்படுத்தவும், சமுதாய வாழ்வை மேம்படுத்தவும் பெண்கள் இதுபோன்ற துறைகளில் இணைந்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். ●

**ஜெயா**

## போர்க்கால யாத்திரையும் எழுச்சிக் கூத்தும்

**வி**டுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பிரிவினர் போர்க்கால யாத்திரை மற்றும் எழுச்சிக் கூத்து என்பவற்றை கிராமந்தோறும் நிகழ்த்தி வருகின்றனர்.



தமிழீழத்தில் தமிழரின் தேசிய பலத்தைச் சிதைத்துவிடும் நோக்கத்தோடும், ஸ்ரீலங்காவின் படைத்துறைத் தலைமை தற்போது முடுக்கிவிட்டிருக்கின்ற இராணுவ நடவடிக்கைகளையும், இவற்றுக்கெதிரான மக்கள் கிளர்ச்சிகளையும், மக்கள் விடுதலைப் புலிகளோடு இணைந்து போராடுவதையும் மையமாகக் கொண்டு இந்தப் போர்க்கால யாத்திரையும் எழுச்சிக் கூத்தும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போர்க்கால யாத்திரையின்போது கருத்தோவியங்களும் இடம்பெற்றுள்ளன.

## வடமராட்சிப் பகுதியில் தாயகத்தின் தாகம்.

**வி**டுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக வடமராட்சிப் பிரிவினரால் "தாயகத்தின் தாகம்" என்னும் வீதி நாடகம் வடமராட்சிப் பகுதியின் பல பகுதிகளிலும் மேடையேற்றப் பட்டு வருகின்றுது.

இவ் வீதி நாடகத்தில் சிறிலங்கா அரச படைகளின் படையெடுப்பு நடவடிக்கை, தமிழீழ மக்களின் பங்களிப்பு, தமிழீழ மண்ணின் தேவை, இந்த மண்ணை விட்டு அன்னியப்பட்டு வரும் மக்களின் மனோ நிலைமைகள் என்பன குறியீட்டு முறையில் விபரமாக எடுத்தியம்பப்பட்டு வருகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# "இந்தியா டுடே"யின் விஷமத்தனம்

இந்தியா டுடே (ஜீலை 21 -ஆக. 5, 1992) "இலங்கை: திணறும் விடுதலைப் புலிகள்" என்ற தலையங்கத்தில் "ஸ்பெஷல் ரிப்போர்ட்" ஒன்றைத் தந்தது. பர்வீன் சோப்ரா மத்திய கட்டளையகத்திலிருந்து வழிகாட்ட, அமர்நாத் மேனன் எனும் முதன்மைச் செய்தியாளரும், போட்டோகிராபர் ஷ்யாம் டெக்வானியும் "களம்" கண்டு வந்து எழுதினார்கள். தமிழீழத்தின் வடபகுதியில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு சில பகுதிகளுக்கு அரசபடை அதிகாரிகளின் அரவணைப்பில் சென்றதைவிட தலைநகர் கொழும்பில் இருந்தவாறே ஸ்ரீலங்கா அரச செய்திகளை வைத்து இக்கட்டுரையை எழுதியிருக்கலாம். இக்கட்டுரையின் நோக்கம் முழுப்பூசனிக் காயை சோற்றில் மறைப்பதே.

யாழ்க்குடா நாடு, நூற்றுக்கு நூறு தமிழர் வாழும் பகுதி. எட்டு இலட்சம் மக்கள் வாழுகிறார்கள். ஸ்ரீலங்கா அரசின் அராஜக நடவடிக்கைகளினால் -பாதிக்கப்பட்டு அகதிகளானோரில் பெரும்பான்மையினர் குடாநாட்டுக்கு தஞ்சமாக வந்துள்ளனர். இப்பகுதியிலேயே விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது. புதிய பொருளாதார நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அகதிகள், அநாதைகள் பராமரிப்பும், பெண்கள் புனர்வாழ்வும் இங்கு விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. கல்வியும், கலையும், பண்பாடும் வளர்க்கப்படுகின்றன. சாதிய வேறுபாடுகளும், சமூக ஒடுக்கு முறைகளும் தகர்க்கப்படுகின்றன. இந்த நல்ல அம்சங்களை கட்டுரையாளர் கேள்விப்படவே இல்லைப் போலும். தமிழர் தாயகம் என்பது யாழ் குடாநாடே என்ற ரீதியில் காட்ட முற்படும் "இந்தியா டுடே" கட்டுரையாளர் இனக்கொலை இடம் பெறும் தென் தமிழீழம் என்ற ஒன்று இருப்பதையே மறைக்கவே விரும்புகின்றார். தமிழர் தாயகத்தின் தலையாக விளங்குகின்ற யாழ்க்குடா நாட்டை ஸ்ரீலங்கா அரசாங்கம் நசுக்க விரும்புகின்றது என்பதும் உண்மை. வடபகுதிக்கு, குறிப்பாக யாழ்க்குடாநாட்டுக்கு 30% அத்தியாவசிய உணவுப் பொருட்களே சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல்கள் மூலம் அனுப்பப்படுகின்றன. உணவுப் பொருட்கள் மட்டுமல்ல, மருந்துப் பொருட்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மின்சாரம் இல்லை, எண்ணை இல்லை, வாகனப் போக்குவரத்தில்லை. அது மாத்திமல்ல அடிக்கடி அரசினால் கட்டவிழ்த்து விடப்படும் இராணுவ நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கையையே நரகமாக்கி விடுகின்றன. விமானக் குண்டு வீச்சுகளும், பீரங்கித் தாக்குதல்களும் சன நெருக்கம் நிறைந்த குடாநாட்டில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இவை அனைத்துக்கும் எதிரான போராட்டமாகவே -தமிழ் மக்களின் வாழ்க்கை அமைந்து காணப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசின் அடக்கு முறைக்கெதிராக போராடும் அம்மக்கள் மீதே -பயங்கரப் போர் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. கட்டுரை ஆசிரியர் காட்ட விரும்புவது போல் "நலிந்து போன புலிகளுக்கு" எதிராகவல்ல, தமிழ் மக்களுக்கு எதிராகவே இப்போர் நடத்தப்படுகின்றது. இப்போர் நடவடிக்கையின் கோரச் சூழ்நிலையில் -கல்வி கற்ற மாணவர் மீது தரப்படுத்தல் முறையை திரும்ப அமுல்படுத்தும் ஓர் அரசாங்கம் உலகில் எங்கேயும் இருக்க முடியாது. போர் நெருக்கடியினுள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கல்வி கற்ற தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைவதற்கு 30 புள்ளிகளைக் கூடுதலாக பெறவேண்டிய நிர்ப்பந்தம் -எந்த ஒரு நாகரிக நாட்டிலும் ஏற்பட்டிருக்க முடியாது. "குடிமக்கள் பலியாவதுதான் எங்கள் கவலை" என்று ஒரு இராணுவத் தளபதி கூறுவதானது பொய்யே தவிர வேறில்லை. இதே சண்டையின் போதுதான் 31. 05. 92ல் தெல்லிப்பளை அம்மன் கோவில் விமானத் தாக்குதலுக்குள்ளானது. தெல்லிப்பளை அம்மன் கோயில் -கோயில் மட்டுமல்ல அகதி முகாமாகவும் விளங்கியது. 175 அகதிக்குடும்பங்கள் அங்கிருந்தன. வழமையாக ஸ்ரீலங்கா அரசாங்க அறிவிப்பு தனை கருத்தில் கொண்டு, கோயில், பள்ளிக்கூடம் ஆகியவற்றில் மக்கள் தஞ்சம் அடைந்தனர். அந்தக் கோயிலை நோக்கியே தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. ஆறுபேர் இறந்து போய் பலர் படுகாயம் அடைந்தனர். கோயில் கட்டிடங்கள் பல சேதமடைந்தன. இது குறித்து செய்தியாளர் மூச்சுக் கூடவிடவில்லை.

"திணறும் விடுதலைப் புலிகள், நலிந்துபோன புலிகள், கிடுக்குப்பிடியில் யாழ்ப்பாணம், மனோதிடம் தளர்ந்து வளைக்கப்பட்ட புலிகள்" -இவ்வாறான அடைமொழிகளுடன் கட்டுரையாளர், விடுதலைப் புலிகளின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# "இந்தியா டுடே"யின் விஷமத்தனம்




இந்தியா டுடே (ஜீலை 21 -ஆக. 5, 1992) "இலங்கை: திணறும் விடுதலைப் புலிகள்" என்ற தலையங்கத்தில் "ஸ்பெஷல் ரிப்போர்ட்" ஒன்றைத் தந்தது. பர்வீன் சோப்ரா மத்திய கட்டளையகத்திலிருந்து வழிகாட்ட, அமர்நாத் மேனன் எனும் முதன்மைச் செய்தியாளரும், போட்டோகிராபர் ஷ்யாம் டெக்வானியும் "களம்" கண்டு வந்து எழுதினார்கள். தமிழீழத்தின் வடபகுதியில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு சில பகுதிகளுக்கு அரசபடை அதிகாரிகளின் அரவணைப்பில் சென்றதைவிட தலைநகர் கொழும்பில் இருந்தவாறே ஸ்ரீலங்கா அரச செய்திகளை வைத்து இக்கட்டுரையை எழுதியிருக்கலாம். இக்கட்டுரையின் நோக்கம் முழுப்பூசனிக் காயை சோற்றில் மறைப்பதே.

யாழ்க்குடா நாடு, நூற்றுக்கு நூறு தமிழர் வாழும் பகுதி. எட்டு இலட்சம் மக்கள் வாழுகிறார்கள். ஸ்ரீலங்கா அரசின் அராஜக நடவடிக்கைகளினால் -பாதிக்கப்பட்டு அகதிகளானோரில் பெரும்பான்மையினர் குடாநாட்டுக்கு தஞ்சமாக வந்துள்ளனர். இப்பகுதியிலேயே விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது. புதிய பொருளாதார நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அகதிகள், அநாதைகள் பராமரிப்பும், பெண்கள் புனர்வாழ்வும் இங்கு விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. கல்வியும், கலையும், பண்பாடும் வளர்க்கப்படுகின்றன. சாதிய வேறுபாடுகளும், சமூக ஒடுக்கு முறைகளும் தகர்க்கப்படுகின்றன. இந்த நல்ல அம்சங்களை கட்டுரையாளர் கேள்விப்படவே இல்லைப் போலும். தமிழர் தாயகம் என்பது யாழ் குடாநாடே என்ற ரீதியில் காட்ட முற்படும் "இந்தியா டுடே" கட்டுரையாளர் இனக்கொலை இடம் பெறும் தென் தமிழீழம் என்ற ஒன்று இருப்பதையே மறைக்கவே விரும்புகின்றார். தமிழர் தாயகத்தின் தலையாக விளங்குகின்ற யாழ்க்குடா நாட்டை ஸ்ரீலங்கா அரசாங்கம் நசுக்க விரும்புகின்றது என்பதும் உண்மை. வடபகுதிக்கு, குறிப்பாக யாழ்க்குடாநாட்டுக்கு 30% அத்தியாவசிய உணவுப் பொருட்களே சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல்கள் மூலம் அனுப்பப்படுகின்றன. உணவுப் பொருட்கள் மட்டுமல்ல, மருந்துப் பொருட்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மின்சாரம் இல்லை, எண்ணை இல்லை, வாகனப் போக்குவரத்தில்லை. அது மாத்திமல்ல அடிக்கடி அரசினால் கட்டவிழ்த்து விடப்படும் இராணுவ நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கையையே நரகமாக்கி விடுகின்றன. விமானக் குண்டு வீச்சுகளும், பீரங்கித் தாக்குதல்களும் சன நெருக்கம் நிறைந்த குடாநாட்டில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இவை அனைத்துக்கும் எதிரான போராட்டமாகவே -தமிழ் மக்களின் வாழ்க்கை அமைந்து காணப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசின் அடக்கு முறைக்கெதிராக போராடும் அம்மக்கள் மீதே -பயங்கரப் போர் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. கட்டுரை ஆசிரியர் காட்ட விரும்புவது போல் "நலிந்து போன புலிகளுக்கு" எதிராகவல்ல, தமிழ் மக்களுக்கு எதிராகவே இப்போர் நடத்தப்படுகின்றது. இப்போர் நடவடிக்கையின் கோரச் சூழ்நிலையில் -கல்வி கற்ற மாணவர் மீது தரப்படுத்தல் முறையை திரும்ப அமுல்படுத்தும் ஓர் அரசாங்கம் உலகில் எங்கேயும் இருக்க முடியாது. போர் நெருக்கடியினுள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கல்வி கற்ற தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைவதற்கு 30 புள்ளிகளைக் கூடுதலாக பெறவேண்டிய நிர்ப்பந்தம் -எந்த ஒரு நாகரிக நாட்டிலும் ஏற்பட்டிருக்க முடியாது. "குடிமக்கள் பலியாவதுதான் எங்கள் கவலை" என்று ஒரு இராணுவத் தளபதி கூறுவதானது பொய்யே தவிர வேறில்லை. இதே சண்டையின் போதுதான் 31. 05. 92ல் தெல்லிப்பளை அம்மன் கோவில் விமானத் தாக்குதலுக்குள்ளானது. தெல்லிப்பளை அம்மன் கோயில் -கோயில் மட்டுமல்ல அகதி முகாமாகவும் விளங்கியது. 175 அகதிக்குடும்பங்கள் அங்கிருந்தன. வழமையாக ஸ்ரீலங்கா அரசாங்க அறிவிப்புதனை கருத்தில் கொண்டு, கோயில், பள்ளிக்கூடம் ஆகியவற்றில் மக்கள் தஞ்சம் அடைந்தனர். அந்தக் கோயிலை நோக்கியே தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. ஆறுபேர் இறந்து போய் பலர் படுகாயம் அடைந்தனர். கோயில் கட்டிடங்கள் பல சேதமடைந்தன. இது குறித்து செய்தியாளர் மூச்சுக் கூடவிடவில்லை.

"திணறும் விடுதலைப் புலிகள், நலிந்துபோன புலிகள், கிடுக்குப்பிடியில் யாழ்ப்பாணம், மனோதிடம் தளர்ந்து வளைக்கப்பட்ட புலிகள்" -இவ்வாறான அடைமொழிகளுடன் கட்டுரையாளர், விடுதலைப் புலிகளின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



துர்க்கை அம்மன் கோவில் குண்டுவீச்சைக் கண்டித்து ஊர்வலம்.

நிலையை வர்ணித்துள்ளார். இவை சஞ்சிகை நிர்வாகத்தின் விருப்பே அன்றி உண்மையில்லை. இதனை முழுமையாக கற்பனையிலேயே எழுதியிருக்கலாம். இந்தியாவின் பல பத்திரிகைகள் அதனைத்தான் செய்கின்றன. ஆனால் நேரடி அறிக்கை போன்று தோற்றம்தர மேற்கொண்ட பயணம் அவர்களது புத்திசாலித்தனத்தைத்தான் காட்டுகிறது. புத்திசாலித்தனம் இல்லாது போயிருந்தால் -தமிழ் வாசகர்களை ஏமாற்றியபடி இவ்வளவு காலம் இச்சஞ்சிகை கொடிகட்டிப் பறக்க முடியுமா? ஸ்ரீலங்கா இராணுவத்தின் முகாமினுள் அவர்களுக்கு கிடைத்தது பாதுகாப்பு மட்டுமல்ல ஏராளமான பொய்சரடுகளும்தான்.

விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டுப் போனார்கள் என்று இச் சஞ்சிகை எழுதும் போதே, விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நிலை குலைய வைக்கும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகள் யாழ்க்குடா நாட்டினுள் முடக்கப்பட்டிருந்தால், எப்படி இராணுவ முகாம்களாலும், சிங்கள குடியேற்றங்களாலும் ஆக்கிரமிக்கப்படும் கிழக்குப் பகுதியில் -இத்தகு அதிரடித் தாக்குதல்களை நடத்த முடியும்? உண்மையில் பலவீனப்பட்டுப் போனது ஸ்ரீலங்கா இராணுவம்தான். இந்தியா டுடேயில் கட்டுரை எழுதப்படும் காலத்திலேயே, ஒரு சில மாதங்களிலேயே பல முனைகளில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தனித் தனித் தாக்குதல்களில் 200க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அரசாங்கமே ஒத்துக்கொண்டது. இதனைத் தொடர்ந்து, கிழக்குப் பகுதியில், இராணுவ ரோந்துகளை நிறுத்தப் போவதாகவும், தாக்குதல்களுக்கு உள்ளாகக்கூடிய சிறிய முகாம்களையும், காவல் அரண்களையும் அகற்றப் போவதாகவும், இராணுவப் பேச்சாளர் கேணல். முணசிங்கா அறிவித்தார். அண்மைக் காலங்களில் 7000 இராணுவ வீரர்கள் களத்தைவிட்டு ஓடிப்போய்விட்டதாக 09. 08. 92ல் "சண்டே ரைம்ஸ்" என்ற பிரபல கொழும்புப் பத்திரிகை அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டது. இராணுவத்தை விட்டு ஓடியவர்கள் மீது -நடவடிக்கை எடுக்காதது மாத்திரமல்ல, இராணுவ விதிகளுக்கு மாறாக எவ்வித தண்டனையும் இல்லாமல் திரும்ப எடுக்கப் போவதாகவும் அரசாங்கம் அறிவித்தது. மேலும் ஆயுதப் படையினரின் மனப்பயத்தைப் போக்கும் நோக்குடன், உளவியல் ரீதியான "சிகிச்சையை" இராணுவப் பயிற்சித் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அரசாங்கம் அறிவித்தது. இதற்கான உறுதியான ஆதாரங்கள் இருக்கின்றன. அரச புள்ளி விபரங்களே இதனை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றபோது தமிழ் வாசகர்கள் பத்தாம் பசலிகள் என்ற நினைப்பில்தானே "இந்தியா டுடே" அபத்தங்களைக் கூற முனைந்தது. அண்மைக்காலங்களில் இராணுவம் 2700 தனது வீரர்களை இழந்து விட்டது. 600-0க்கு மேற்பட்ட இராணுவத்தினர், சண்டைக்குத் திரும்ப முடியாத அளவு கடும் காயங்களுக்கு உள்ளானார்கள். இராணுவம் இழந்த 4000 ஆயுதங்களில், 3000 தானியக்க வகையைச் சேர்ந்தவை. (சன்டே ரைம்ஸ் 09. 08. 92) அரசாங்கத்தின் இன்னொரு புள்ளி விபரம் இராணுவத்தினதும், சிங்களப் பொதுமக்களினதும் போர் குறித்த மனோநிலை பற்றி தெளிவாக விளக்கம் தந்தது. 1000 இராவத்தினரை ஆள்ச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது 360 பேரே விண்ணப்பித்திருந்தார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் நிரம்பியுள்ள இலங்கையில் தனிச் சிங்கள இராணுவத்திற்கு ஆட்கள் சேர முன்வராமை எதைக் காட்டுகின்றது? யார் பலவீனமாக உள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது? 05. 07. 92ம் திகதியன்று விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு பீரங்கியால் சீன ரக Y8 போக்குவரத்து விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. 11. 07. 92ம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






டென்சில் கொப்பேக்கடுவ





விஜய் விமலரத்ன



ஜெயமகா

திகதி எதிரியின் பகுதிக்குள், அனுராதபுர எல்லையைத் தொடும் வண்ணான்குள இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் விசேட அதிரடிக் குழுவினால் தாக்கி 30 நிமிடங்களில் முற்றாக அழிக்கப் பட்டது. பெண்களும் கலந்து கொண்ட இவ் மின்னல் வேகத் தாக்குதல் இதுவரை நடைபெறாத பெரும் சாதனையாக அமைந்தது. 50க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, பல கவச வாக னங்கள் நிர்மூலமாக்கப்பட்டு, 10-0க்கு மேற்பட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இறுதியாக, மரண அடியாக வடபகுதிக்கான இராணுவத் தலைமைப்பீடமே 08. 08. 92ம் திகதியன்று அழித்தொ ழிக்கப்பட்டது. விடுதலைப் புலிக ளின் விசேட உளவுப்படையே இச் சாதனையைச் செய்தது. "புலிக ளின் சகவாசமே இல்லாதொழிக் கப்பட்டதாக" கருதப்பட்ட தீவுப் பகுதியில் ஒன்றான ஊர்காவற்து றையிலேயே இது நடைபெற்றுள் ளது. கட்டுரையாளர் குறிப்பிடும் மேஜர். ஜெனரல். டென்சில் கொப் பேக்கடுவ, வடபகுதி கடற்படைப் பொறுப்பதிகாரி கொமடோர் மோகன் ஜெயமகா ஆகியோரும் மேலும் பல உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். கொலையு ண்ட யாழ் குடாநாட்டுத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தின விஷேச பயிற்சிபெறும் பொருட்டு இந்தியா செல்ல இருந்தார் என் பதும் குறிப்பிடத்தக்கது. கட்டுரை யில், ஜெயமகா குறிப்பிட்டது போல், "இந்தியக் கடற்படை தமிழகக் கடற்கரையோரத்தை கண்காணிப்பதும், மாநிலத்தில் புலிகள் ஒடுக்கப்பட்டுள்ளதும் இலங்கையில் புலிகளின் நடவடிக் கைகளை ஏற்கனவே ஓரளவு எளிதாக்கி இருக்கிறது." இது எதனைக்குறிக்கிறது? இலங்கை - இந்திய கூட்டு இராணுவச் செயல்ப்பாட்டைத்தான் காட்டுகின் றது. குடாநாட்டின் மீது பெரும் அழிவைத் தரும், பெரும் ஆக்கிர மிப்பொன்றை மும்முனையில் மேற் கொள்ளத் திட்டமிடுகையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றது. டென்சில் கொப்பேக்கடுவவைப் பொறுத்தவரை பெரும் இராணுவ நகர்வுகளைச் செய்து, முப்படைக ளின் துணையுடன், மரபுப் போர் புரிவதில் வல்லவராகவே இருந் தார். களத்தில் நின்று சண்டை யிடும் காரணத்தினால், போர்வீரர் மத்தியில் நன்மதிப்பையும், நேசிப் பையும் கொண்டவராகத் திகழ்ந் தார். மேலும், பொதுமக்களின் ஆதரவைக் கவருதல் என்ற உத் தியையும் நன்கு உணர்ந்தவராக வும், கையாள்பவராகவும் இருந் தார். அரசியல், பிரச்சாரம் ஆகி யவை இராணுவ நடவடிக்கை யோடு திறம்பட ஒருங்கிணைக்கப் பட வேண்டும் என்பதில் அசை யாத நம்பிக்கை கொண்டிருந்தார். பொது மக்கள் உறவு (Public Relat-ion) என்ற வித்தையை சிறப்பாக கையாளத் தெரிந்தவர். சிங்கள தேசத்தின் ஒரு சிறந்த இராணு வத் தலைவர் இறந்தது அதற்குப்

கொப்பேக்கடுவவின் இறுதி ஊர்வலம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பெரும் இழப்பே ஆகும். ஆயினும் குடிசன நெருக்கம் நிறைந்த பகுதிகளில், பெரும் இராணுவ நடவடிக்கைகளை "பொது மக்கள் நலன்" என்ற பிரச்சாரத்துடன் செய்து, பாரிய அழிவுகளை ஏற்படுத்தவல்ல இத்தகைய இராணுவத் தலைவர்கள் அழிக்கப்படுவது தமிழீழ மக்களுக்கு மிகுந்த நன்மை பயப்பனவே.

இந்தியா டுடேயின் கட்டுரையாளர், ஜனாதிபதி பிரேமதாசா அரசியல் தீர்வு காண விரும்புவதாகவும், இராணுவ வெற்றியைக் காணவிரும்பும் இராணுவத்திற்கு அவர் இணங்கிப் போக வேண்டியவராய் உள்ளார் என்றும் கருத்துப்பட எழுதியுள்ளார். இதைவிடப் பொய்மை வேறில்லை. ஸ்ரீலங்கா ஜனாதிபதிதான் ஆயுதப்படைகளின் உயர் தளபதி (Supreme Commander). மேலும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின்போதும் வாரா வாரம், கூடுகின்றபோதும் பாதுகாப்புச் சபைக்குத் (Security Council) தலைமை தாங்குபவரும் இவரே. சகல ஆயுதப்படைத் தளபதிகள், உயர்மட்ட அரச அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கியதே இச்சபையாகும். இராணுவத்தை வழிநடத்தி, இராணுவத்தீர்வுக்கு ஜனாதிபதிதான் முயல்கிறார் என்பதே உண்மையாகும்.

இந்த உண்மையை கட்டுரை ஆசிரியரும் மறைக்க முடியாமல், "பிரேமதாசாவின் சாணாக்கியத்தனமான நடவடிக்கைகள்" என்ற வசனத்தின் மூலமே, தான் வாசகர்களுக்கு காட்ட முனைந்த பொய்க்கருத்தை உடைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, எப்போதும் தமது சமாதானக் கதவினைத் திறந்தே வைத்துள்ளனர். தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனையை, பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க விரும்பினால் அதற்கும் தயாராக உள்ளனர். ஆனால் இராணுவ ரீதியாகவே தீர்க்க விரும்பினால், அதற்கு மரண அடி கொடுத்து தமது இலட்சியத்தை நிறைவேற்ற அவர்கள் எப்போதும் தயாராக உள்ளனர். அப்பாதையில் எந்நெருக்கடிகளையும் வென்று முன்னேறுவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களும் வேறு வேறு என்று காட்ட கட்டுரையாளர் எடுத்த முயற்சியும் தோல்வியைக் கண்டுள்ளது. உண்மையை மறைத்து, பொய்யான தோற்றத்தைத் தர, அதனடிப்படையில் செயற்பட சில இந்திய பத்திரிகையாளரும், இந்திய ஆளும் வர்க்கத்தில் ஒரு சிலரும் எடுக்கும் முயற்சியானது இறுதியில் இந்திய தேசிய நலனுக்குக் குந்தகமாகவே முடியும். ஒரு நட்புச் சக்தியை நிரந்தரமாக இழந்த நட்டமே ஏற்படும். ●

**மதி**

# தரப்படுத்தல் எனும் தீமை

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் தொடர்ந்தே வந்ததாயினும், வெட்டுப்புள்ளியில் திடீரென ஏற்பட்ட உயர்வு தமிழ் மாணவர்களைத் தடுமாற வைத்துள்ளது. 1990 ம் ஆண்டு ஆவணி மாதம் நடாத்தப்பட்ட க. பொ. த(உயர்தர)பரீட்சை,போர்ச் சூழ்நிலை காரணமாக ,வடபகுதி மாணவர்களுக்கு 1991-சித்திரை மாதம் நடாத்தப்பட்டது. இவ்விரண்டு பரீட்சைகளையும் வெவ்வேறு பரீட்சைகளாகக் கருதி, புறம்பான வெட்டுப்புள்ளிகளை கல்வி அமைச்சு அறிவித்த போது, 50% ஆன தமிழ் மாணவர்கள் இதனால் பாதிப்படைந்தனர். சித்திரையில் நடந்த பரீட்சை, ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் விமானக் குண்டு வீச்சுக்களுக்கிடையிலேயே நடைபெற்றது. மின்சாரம் இன்றி, மண்ணெண்ணை விளக்கின்றி,போக்குவரத்து வசதியின்றி, போர்ச் சூழ்நிலையில் கல்வி கற்றுத் தேறிய மாணவர்களுக்கு, இத்தகைய ஒரு கொடுமையை சிங்கள இனவாத அரசினால் மட்டுமே உலகில் செய்ய முடியும். பொறியியல், வர்த்தக துறைகளுக்கு, தென்பகுதி-வடபகுதி மாணவர்களுக்கிடையில் வெட்டுப்புள்ளி வேறுபாடு 30 -32 ஆக இருக்கின்றது. கல்வியில் நிகழும் இனப்படு கொலை குறித்து கிளர்ந்தெழுந்த தமிழ் இளைஞர்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கூடி ஆராய்ந்தனர். இவ் அநீதியைத் தட்டிக்கேட்கவும், உயர்நீதி மன்றத்தில் வழக்காடவும் 15பேர் கொண்டகுழுவொன்றை அமைத்தனர். கொழும்பில் கல்வி அமைச்சிடம் வாதிடவும், உயர் நீதிமன்றில் மனு சமர்ப்பிக்கவும் காரியங்கள் இடம் பெற்று வருகின்றன. கொழும்பு உயர் நீதிமன்றத்தில் பொறியியல் துறையில், 1A. 3C பெற்று 276 புள்ளிகளைப் பெற்ற தமிழ் மாணவன் இராஜதுரை. சுரேந்திரன் பல்கலைக் கழக அனுமதி மறுக்கப்பட்டமையினால், உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். பொறியியல் துறையில் கொழும்பு மாணவன் 260 புள்ளிகளையும், வடபகுதி மாணவன் 290 புள்ளிகளையும் பெறவேண்டிய பாரிய இடைவெளியை அவர் தனது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார். 1970ம் ஆண்டு அதாவது 20 வருடங்களுக்கு முன்னர் அன்றைய கல்வியமைச்சர் பதியுதீன் முகமத் இனால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் இன்று சாகுல் ஹமீத்தால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களின், இளைஞர்களின் கிளர்ச்சிக்கு எண்ணை வார்த்த இவ் ஒடுக்குமுறை இன்று தமிழ் மக்கள் அனைவரதும் மனங்களில் எரிமலையையே எழுப்பிவிட்டது.

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

நேருக்கு நேர்

# இலந்தைக் காடு

## கிராமத்திற்கு நேரில் சென்று

## கண்டதும் கேட்டதும்



காப்பரண
தமிழீழம்

யாழ் மாவட்டம் முழுவதும் பனம் பொருட்களை அதிகம் அறிமுகப்படுத்தியவர்கள் என்ற பெருமை வடமராட்சி மக்களையே சாரும்.

மேலும் வடமராட்சியில் பனம்பொருள் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் என்ற முழுவதற்குமே முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்றால் "இலந்தைக் காடு" என்னும் ஓர் குக்கிராமத்து மக்கள் என்றுதான் கூறவேண்டும்.

இவர்கள் இன்று நேற்றல்ல பண்டைய காலந்தொட்டு பனைமரங்களுடன் இரண்டறக் கலந்தவர்கள்.

நாம் அக்கிராமத்தை நோக்கி காலைவேளை சென்றபோது "இலந்தைக்காடு" என்ற பெயர் இருந்தமையால் அந்த மரங்களையே மனதில் பதிய வைத்தபடி சென்றுகொண்டிருந்தோம். ஆனால் எமக்கு பெருத்த ஏமாற்றம்தான் கிடைத்தது. காரணம் அங்கு இலந்தை மரத்திற்குப் பதிலாக பனஞ்சோலை மயமாகவே இருந்தது.

ஒவ்வொரு பனையின் கீழும் பெரிய பெரிய அளவிலான மண் பானைகள் பதநீர்நுரை தள்ளிய வண்ணம். அவற்றை இறக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஓலையிலான பானைவடிவ அமைப்பினைக்கொண்ட ஓலைப்பட்டைகளும் கைபிடி போட்ட அமைப்பில் காணப்பட்டன. சில தொழிலாளர்கள் அவர்களின் தொழிலுக்கேற்ற நடைமுறைத்தேவையான தளநார் இயனக்கூடு (கத்திபோன்ற ஆயுதங்கள் வைப்பதற்கான உறை) இடையில் கயிறுகளால் கட்டியும் கால் அணியாக (அடையாளம் வராமல்) காதோல், நெஞ்சுத்தோல் (நெஞ்சில் அடையாளம் வராமல் பாதுகாக்க) இயனக்கூட்டின்மேல் (காலுக்குப்போட்டு பனை ஏறும்) தளநார், பதநீர் இறக்குவதற்கான மண்முட்டிகளும், பனம் ஓலையிலான பட்டைகளும் தொங்கவிட்டவாறு வீறுநடை போட்டுச் சென்றதானது போர்களத்துக்கு சீருடை அணிந்து வீரநடை போட்டுச்சென்ற போர் வீரர்களைப் போன்றிருந்தது. சில பனைகளின் கீழ் ஆண்களுக்கு உதவியாக பெண்கள் அவர்களுக்கு காலை உணவுகளும் பனங்கட்டியுடன் தேநீரும் பரிமாறிக்கொண்டிருந்தார்கள். சில பெண்கள் தலையிலும் இடையிலும் (இடுப்பிலும்) பெரிய பானைகளில் பதநீரைக்கொண்டு வீடுநோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

இவர்களின் நடவடிக்கைகளை உற்றுக்கவனித்தவாறு நிற்கும் போது பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் வெள்ளைச் சீருடைகளுடன் திரள் திரளாகச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களிற் சிலர் புழுக்கொடியல், அவித்த பனங்கிழங்கு போன்றவற்றை மறைத்தவண்ணமும் கொண்டு செல்வதையும் காணமுடிந்தது. "நீங்கள் எவ்விடத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்றும், எந்தப் பாடசாலைக்குச் செல்கின்றீர்கள் என்றும், ஏன் வழிநெடுக உண்கிறீர்கள்" என்றும் வினவினோம்.

அவர்கள் தாம் இலந்தைக் காட்டைச் சேர்ந்தவர்கள் என்றும், காலைவேளை அம்மாக்களும், அப்பாக்களும் தமது சீவல் தொழிலின் விசயமாக பனங்காணிகளுக்குச் சென்றுவிடுவதால் காலை வேளை உணவு சமைப்பதில் காலதாமதமாவதாலும் தாம் காலை உணவாகப் புழுக்கொடியல், அவித்த பனங்கிழங்கு போன்றவற்றை உண்பதாகவும், பாடசாலை தூரம் இருப்பதால் மதிய உணவிற்காகவும் பனம்பழக் காலங்களில் பனாட்டுப் போன்றவற்றையும் உணவாகப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார்கள். அதன்பின் அவ்விடத்தைவிட்டு வேறுபுறம் எம் பார்வையைச் செலுத்தினோம்.

ஒரு சில கல்வீடுகள் தோன்றியபோதும் அங்கு பெருமளவில் ஓலைவீடுகளே காணப்பட்டன.

சில வீடுகளில் "மத்துக் கடையும் போது ஏற்படும் ஓசை போல்" ஓசையுடன் புகையும், பனங்கட்டி (பனம் வெல்லம்) வாசனையும் சேர்ந்து வந்தன. அவர்களின் வீடுகளை நோக்கி எம்மை அறிமுகம் செய்துகொண்டு உள்ளே சென்றோம். பல வயதானவர்களும், இளைஞர்களும் எம்மை வரவேற்றார்கள். வயதானவர்களின் தோற்றம் திடகாத்திரமாகவும் சிலர் முன்பு புரிந்த

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தொழிற் கஷ்டம் காரணமாக மெலிந்தும் காணப்பட்டார்கள். பெண்கள் அன்றைய சாதியமைப்பின் சின்னமாக குறுக்குக்கட்டான சேலையுடனும் (அதாவது மேல் சட்டையின்றி மார்புக்குக் குறுக்காக கைத்தறிச் சேலையுடனும்) இன்றைய இளைஞர்கள் நவீன ஆடைகள் அணிந்து சுதந்திர சமுதாயத்தினராகவும் காட்சியளித்தார்கள். வயதான நாகம்மாவிடம் அவர்களின் உடைபற்றி கேட்ட போது அவர் அன்றைய சாதிமுறை பற்றியும் அதன் தன்மை பற்றியும் தெரிவித்த கருத்தில் எம்மைக் கவர்ந்தவைகளில் ஒன்று, "பனைச்சீவல்". தொழிலை வைத்தே எம்மைத் தாழ்ந்த சாதியாகக் கணித்தார்கள். நாம் தாழ்ந்த சாதியல்ல. தாழ்த்தப்பட்ட சாதி என்பதை இன்று உலகமும் புரிந்துவிட்டது. அன்று நாம் வீதியில் செல்வதற்கும் கூட எமக்கு உரிமை மறுக்கப்பட்டது. அப்படி நாம் செல்ல வேண்டுமாயின் எமது ஊருக்குள் செல்வாக்குள்ள பிரமுகர்களிடமிருந்து அனுமதி பெறவேண்டும். அவர்களின் அனுமதியுடன் கட்டளையும் ஒன்றும் இருக்கும். அது, எம் போன்றவர்கள் கிழிந்த ஆடைதான் போட வேண்டும். பெண்கள் மேற்சட்டை போடக் கூடாது. செத்தவீட்டில் மேளம் (பறை) அடிக்கக் கூடாது. அப்படி அடிப்ப தாயின் ஒட்டையாக்கப்பட்ட மேளம்தான் அடிக்கலாம். தண்ணீர் பொதுக்கிணறுகளில் அள்ளக்கூடாது. அவர்கள்தான் அள்ளி ஊத்தவேண்டும். சிலர் வேலியூடாக வாழைமடல் செருகி அதற்குள்ளாக . அவர்கள் உள்நின்ற வண்ணம் நீர் உற்றுவார்கள். நாம் அதை வெளியில் நின்ற வண்ணம் ஏந்த வேண்டும்."

"நாம் வெளியில் செல்லும்போது (முதிர்ந்த பனைஓலை) காவோலை மட்டையுடன் எமது இடையைக் கட்டியவண்ணம் செல்ல வேண்டும். (ஓலை எமக்குப்பின்னால் தரையில் இழுபட்டவண்ணம் இருக்கவேண்டும்.) அதில் சில அர்த்தங்கள் உண்டு. ஒன்று அந்த ஓலைச்சத்தம் கேட்கும் போது எமது இனம் வீதியில் நடாமடுகிறது என்னும் எச்சரிக்கை. மற்றொன்று எமது காலடி ஓலையால் அழிக்கப்படுகின்றது. எமது காலடியில் கூட அவர்களது காலடி படக்கூடாது என்பது அன்றைய பரம்பரையினரின் ஆணித்தரமான கட்டுப்பாடுகள்."

**நாம் தாழ்ந்த சாதியல்ல, தாழ்த்தப்பட்ட சாதியென்று இன்று உலகம் புரிந்துவிட்டது.**

"எமது பிள்ளைகள் கல்வி கற்கக்கூடாது என்றும் ஒரு சட்டம். அவற்றை கிறிஸ்தவ பாதிரிமார் உதவியினால் ஓரளவு எம்மால் தகர்க்கமுடிந்தது. (கிறிஸ்தவ மதம் பெருமளவில் பரவ இச்சந்தர்ப்பமும் ஒன்றாகும்.) இப்படி எமது பிள்ளைகள் ஒன்று இரண்டு பள்ளியில் படித்ததனால் தான் இன்று எம்மால் சுதந்திரமாகவும் எமது பிள்ளைகள் நாகரிகமாகவும் நடமாடுவதுடன் எமது தொழிலும் அபிவிருத்தி அடைந்தது. இன்று தமிழீழ ஆய்வு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் மூலம் இத் தொழில் பல்கிப் பெருகி தமிழீழத்திற்கே நாம் ஒரு பங்களிப்பாக விளங்குகின்றோம்." என்றார். ●

## கவிஞரின் தீர்க்க தரிசனம்

தமிழர்கள் எதிரியின் விமானங்களை சுட்டு வீழ்த்துவர் என்று அன்றே கவிதைகளில் பாடிவிட்டவர் கவிஞர் காசியானந்தன். இன்று இது நிதர்சனமாகிவிட்டது.

இன்று தமிழர்களுக்கு சிங்கள அரசாங்கத்தால் கொடுக்கப்படும் நெருக்கடிகளும், அந்த நெருக்கடிகளை தமிழர்கள் தமது வீரத்தினால் முறியடிப்பதையும் அன்றே கவிதைகளில் பாடியவர்.

*(உணர்ச்சிக்கவிஞர் காசியானந்தன் அவர்களால் 1965ம் ஆண்டில் எழுதப்பட்ட "தமிழன் கனவு" என்ற குறுங்காப்பியத்திலிருந்து)*



தமிழனுக்கு நாடு வேண்டும். தமிழன் தமிழனாக வாழவேண்டும். அவன் தலை நிமிர்ந்து வீறுநடை போடவேண்டும் என்று தமிழ்நாடு, தமிழ் மொழி என்ற வகையில் உணர்ச்சி கொண்ட, தீர்க்கதரிசனம் கொண்ட கவிஞராவார். புலிப்படை ஈழத்தில் தோன்றும் என்று தன் கவிதைகளில் அன்றே குறிப்பிட்டவர்.

பறவையின் நிரையென<br>
வானிடை எழுந்தன<br>
பகைவர்கள் ஊர்திகளே!<br>
சிறகுகள் துகள் பட<br>
அவை மிசை பறந்தன<br>
தமிழர் கருவிகளே!<br>
திறலுடை தமிழரின்<br>
பொறி பல கணைகளை<br>
அள்ளிச் சிதறினவே!<br>
விறகுகள் என மதில்<br>
வீடுகள் எரிந்தன!<br>
ஊர்கள் வீழ்ந்தனவே!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# தொடர்பியலும் ஒலி ஒளிப்பதிவு நாடாவும்

சபா ஜெயராசா

வெளிச்சம் தமிழீழம்

தொடர்பியலில் புதிய பரிமாணங்களை வழங்குவதில் "வீடியோ நாடா" சிறப்பிடம் பெறுகின்றது.

"அம்பெக்ஸ்", "சொனி" ஆகிய நிறுவனங்கள் ஒலியைப் பதிவு செய்து மீட்டெடுக்கக்கூடிய மின்காந்த நாடாக்களைத் தயாரித்தன. இந்த நிகழ்ச்சி 1948ம் ஆண்டளவில் நிகழ்ந்தது. 1969 ஆம் ஆண்டில் சொனி (அரை அங்) அக்காய் (கால் அங்) ஆகிய நிறுவனங்கள் கறுப்பு வெள்ளை ஒளிப்பதிவு நாடாக்களைத் தயாரித்தன. பிலிப்ஸ் நிறுவனம் 1974 ஆம் ஆண்டில் வண்ண ஒளிப்பதிவு நாடாக்களை அறிமுகம் செய்தது. ஆனால் 1978 ஆம் ஆண்டிலிருந்து மேற்கு நாடுகளில் வீடியோ வீட்டுப் பாவனைக்கு வரலாயிற்று.

செயற்படவில்லை. கல் விசார்ந்த பாடங்களைத் திட்டமிட்டு வழங்குவதற்கும், கற்பிப்பதற்கும் வீடியோ உகந்த சாதனமாகும். பாடங்களை முழுமையாகவும், நெகிழ்ச்சிப் பாங்குடனும் வழங்கும் ஏற்பாடு "மொடியூல்கள்" என்று அழைக்கப்படுகின்றன. "மொடியூல்" என்பதன் தமிழ்ச் சொல் "இதவடிவம்" என்பதாகும். இவற்றை வழங்குவதற்கு வீடியோச்சுருள் மிகவும் பொருத்தமானது.

முறைசாராக் கல்விப் பணிகளில் வீடியோவுக்கு உன்னதமான இடம் உண்டு. பண்ணை உற்பத்தியில் பெருக்கம், ஆடை தயாரித்தல், உணவு பதனிடல், உடல் நலப்பாதுகாப்பு, போன்ற துறைகளிற் கல்வியூட்டுவதற்கு இதன் வலிமை இதுவரை எம்மத்தியில் உணரப்படாததாயிருக்கின்றது.

மிகக் குறுகிய காலத்தில் உலகளாவிய ஒரு தொடர்பு ஊடகமாக வீடியோ வியாபித்துவிட்டது. உலகில் வீடியோ செழிப்புப் பிரதேசங்கள் நான்கு இனங்காணப்பட்டுள்ளன. அவை, ஜப்பான், தென்கீழ் ஆசியா, அரபு நாடுகள், ஐரோப்பா -வட அமெரிக்காக என்பனவாகும். சுமார் 700 இலட்சம் பதிவுசெய்யப்பட்ட வீடியோக்களும், 5000 இலட்சம் வெற்று வீடியோக்களும் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. (யூனஸ்கோ 1988)

தமிழ் மக்களைப் பொறுத்த வரை வீடியோவின் ஒருதலைப் பட்சமான உபயோகம் மேலோங்கியுள்ளது. சினிமாவை வீடுகளுக்குள் கொண்டுவந்த ஒரு சாதனம் என்று வியந்து பாராட்டப்படுகின்றது. கிராமப் புறங்களிலே திறக்கப் பட்டுள்ள வீடியோ வாடகை நிலையங்கள் சினிமா விநியோக நிலையங்களாக இயங்குகின்றன.

பொதுவாக வர்த்தகத் திரைப்படங்களுக்கே வீடியோ கொள்வனவு செய்வோர் மத்தியில் கூடுதலான கேள்வி உண்டு. ஒருவகையில் இங்கிலாந்திலும் இதே வகையான அனுபவமே காணப்படுகின்றது. பரபரப்பான திரைப்படம் 30,000 அலகுகள் வீடியோ மூலம் விற்பனையாக, கடிலத்திரைப்படங்கள் 5000 அலகுகளே விற்பனையாகின்றன.

குடும்ப நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்தல் என்ற வகையில் வீடியோவுக்கு ஒரு முதன்மையான இடம் உண்டு. ஆயினும் எமது பாரம்பரிய சடங்குமுறைகளுக்கு இயைந்த வகையில் "வீடியோ சடங்குகளும்" வளரத்தொடங்கியுள்ளன.


அறிவூட்டல், தகவல் வழங்கல் என்ற வீடியோவின் தாக்கமுள்ள உபயோகங்கள் இன்னமும் எங்கள் மத்தியிலே முழுவீச்சிற்

சிறுவர் கல்வியில் வீடியோவின் உபயோகம் பின்னடைந்த நிலையே மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுகின்றன. இறக்குமதி செய்யப்படும் வீடியோ விளையாட்டுக்கள் எமது சூழலோடு இயைபு கொள்ளாது புடைத்து விலகுகின்றன.

சமூகவியல் நோக்கில் பார்க்கும் பொழுது வீடியோவுக்கும் புதிய பணத்துக்கும் தொடர்பு உண்டு. வெளிநாடுகளுக்குச் செல்வதால் ஈட்டப்படும் பணம் "புதிய பணம்" என்று குறித்துரைக்கப்பட்டுள்ளது. வீடியோ இயந்திரங்கள் (ஹாட்வெயர்) இவர்களாலேயே பெருமளவிற் கொள்வனவு செய்யப்படுகின்றன. நிகழ்ச்சிகளை வீடியோவில் பதிவுசெய்யக்கூடிய ஒரு கைத்தொழில் அமைப்பிலும் இந்தப் புதிய குழுவினரின் பங்கு முக்கியமானதாகும்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வீடியோ ஆளுகை என்பது சமூக அந்தஸ்தின் மதிப்பீடாக வந்துள்ளது. (பாரம்பரிய ய்ாழ்ப்பாண சமூக அந்தஸ்தின் மதிப்பீட்டில் நிலம் ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தது.) சினிமாவின் இரட்டிப்பு நடவடிக்கைக்கு ஒரு கருவியாக வீடியோ பயன்படுத்தப்படும்பொழுது எமது சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றன.

அடுத்த நூற்றாண்டில் வீடியோவின் பயன்பாடு மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உலகளாவிய முறையில் ஏற்பட்டு வருவதனால் அந்தநிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி இலாபமீட்டுவதற்குரிய ஆய்வுகள் ஜப்பானில் முடுக்கி விடப்பட்டுள்ளன. சிறிய கையடக்கமான நுண்ணிய வீடியோ நாடாக்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஏற்கனவே வெற்றி காணப்பட்டுவிட்டது. இன்னொருபுறம் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கை மூன்றாம் உலக நாடுகளின் வீடியோ சந்தையைக் கைப்பற்றுவதற்குத் துணையாக இருக்கும்.

இவற்றின் பின்புலத்தில் மூன்றாம் உலகநாடுகள் வீடியோவை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றன என்பதே பிரதான கேள்விக்குறியாக எழுகின்றது. "அறிவூட்டல்" என்ற செயற்பாடுகளுக்கு அழுத்தங் கொடுக்காது, வெறும் பொழுதுபோக்கு இன்பங்களுக்கு மூன்றாம் உலக நாடுகள் முக்கியத்துவம் கொடுக்குமேயானால் வீடியோ பல்தேசிய நிறுவனங்களின் "நோய் பரப்பி" யாகிவிடும். ●

[redacted]

# பிஞ்சுகளைக் காப்பாற்றுங்கள்



யாழ்ப்பாணக் குடாநாட்டில் குழந்தைகள் மத்தியில் போசாக்கின்மைப் பாதிப்பு பரவி வருகின்றது. தமிழ்ப்பகுதிகள் மீது படையினர் இராணுவத்தாக்குதல் நடத்திப் பலரைத் தொழில் இல்லாமல் மாற்றியதிலிருந்தே இப்பாதிப்பு ஆரம்பமாகிவிட்டது. அரசின் பொருளாதாரத் தடையோடு நிலைமை மோசமாகியது. குடாநாட்டு மக்களில் பலர் அகதி முகாம்களில் வாழும் நிலை, பாதிப்பைப் பலமடங்காக்குகின்றது.

குடாநாடு முழுவதிலும் 1,500 முதல் 2,000 வரையான குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளனர். இது மிகவும் ஆபத்தான ஒரு நிலையாகும். அவர்கள் இறக்கும் தறுவாயில் உள்ள கட்டத்தை எட்டுகின்றார்கள் என்ற தகவல் மிகப் பயங்கரமான நிலையைக் குறிக்கின்றது.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டவர்களென இனங்காணப்பட்ட குழந்தைகளில் நால்வர் கடந்த ஒரு மாதத்தில் இறந்திருக்கிறார்கள் என்பது, குடாநாட்டின் எதிர்காலப் பிரசைகளை எதிர்நோக்கியுள்ள பயங்கரத்தின் தன்மையை எடுத்துக்காட்டப் போதுமானது.

சமூக நலனில் அக்கறையுள்ள சகலரினதும் கவனத்தை ஈர்க்க வேண்டிய இது விடயத்தில், உடனடியான செயற்பாடும், ஒருங்கிணைந்த துடிப்பான விரைந்த நடவடிக்கையும் தேவை.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 2,000 குழந்தைச் செல்வங்களையும் இறந்தொழியவிட்டு, அந்தச் சமூகத் துரோகத்தில் நாமும் பங்காளிகளாகப்போகின்றோமா என்பதை ஒவ்வொரு தமிழரும் மனதைத் தொட்டுக் கேட்க வேண்டும்.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென போசாக்குப் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்திருப்பது ஓர் ஆக்கபூர்வமான ஏற்பாடாகும். பாதிக்கப்பட்ட குழந்தைகள் பரவலாக இருப்பதால் அவர்களை இனங்காணுதல், அவர்களுக்கான பணிகளை ஒருமுகப்படுத்தல் ஆகியவற்றை இதன் மூலம் ஒருவழிப்படுப்படுத்தி, ஆற்றுப்படுத்தி உரிய பெறுபேறுகளை அடையலாம்.

இது விடயத்தில் சுகாதாரத் திணைக்களம் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் தமது வளங்களை ஒன்று திரட்டியும் சேவைகளை இணைத்து ஒருமுகப்படுத்தியும் பணிபுரிவது அவசியமாகும். எல்லோரது கூட்டு முயற்சியும் சேர்ந்தால், 2,000 குழந்தைகளையும் காப்பாற்றி வாழ்வளிக்கலாம்.

போசாக்குள்ள உள்ளூர் உணவுப்பொருட்களை எவ்வாறு இத்தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கான சாத்தியங்களையும் இவ்வேளையில் ஆய்ந்தறிந்து அறிமுகப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே எதிர்காலத்தில் இவ்வித ஆபத்து இளம் சந்ததியை அச்சுறுத்தாமல் தவிர்க்கமுடியும். குறைந்த செலவில் நிறைந்த போசாக்குள்ள உள்ளூர் உணவு வகைகளை மக்கள் மத்தியில் குறிப்பாக தாய்மார் மத்தியில் அறிமுகப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டப்பட வேண்டும்.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்ற எல்லோரது ஒத்துழைப்பும், ஆதரவும் கூட்டு முயற்சியும் உடனடித் தேவைகளாகும்.

**எம் தேசத்தில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நல்வாழ்வுக்காக அனைவரின் உடனடி ஒத்துழைப்பையும் ஆதரவையும், கேட்டு உள்ளத்தை உருக்கும் வண்ணமாக உதயன் பத்திரிகையில் எழுதிய ஆசிரியர் தலையங்கம்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




பசி, தாகம், நீண்ட பயணம், மரணம் என்பவற்றையே தன்னால் வழங்க முடியும் என்றும், சுகமான நல்வாழ்வுக்கு உறுதியில்லையென்றும் தாய் நாட்டின் மீது உண்மையான பற்றுடையோர் தன்னோடு சேரலாம் என்றும் கூறி, அவ்வாறு தன்னுடன் இணைந்த போராளிகளைக் கொண்டு போர் நிகழ்த்தி இத்தாலியை ஒற்றுமைப்பூண வைத்தான் கரிபால்டி. கழுத்துகளிலே சயனைற்றைக் கட்டிக்கொண்டு தம் தலைவன் ஆணையிட்டால் அதனை விழுங்கி மரணத்தைத் தழுவிக்கொள்ளவும் ஆயத்தமாயுள்ள மாவீரர்களைக் கொண்ட புலிப்படைக்குத் தளபதி பிரபாகரன் என்னும் பொழுது, இவர் கரிபால்டியிலும்




## பிரபாகரன்

பலர் உலகிலே பிறந்து தமக்கென வரலாறு இல்லாமலே மறைந்து போகின்றனர். அவர்களிலும் குறைந்த தொகையினர் வரலாற்றிலே தங்கள் சுவடுகளைப் பதித்துச் செல்கின்றனர். வரலாற்றைத் தாமே படைத்து அதன் நாயகராகவும் விளங்குவோர் மிகச் சிலர்தாம். அந்தச் சிலருள் ஒருவரே வேலுப்பிள்ளை பிரபாகரன்.

"முடியாது என்ற வார்த்தை எனது அகராதியிலே இல்லை" என்றான் நெப்போலியன். ஆனாலும் ருஸ்யப் படை எழுச்சியிலும், மத்தியதரைக் கடற்போரிலும் அவனாலும் முடியாது போனவற்றை வரலாறு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. பிரபாகரனைப் பொறுத்தவரையில், அவர் முடியாததை முடித்துக் காட்டும் சாதனையைப் புரிந்தவர் என்று, வரலாறு என்றும் பேசும். எண்ணிக்கையிலே மிகக் குறைந்த போராளிகளோடு உலகின் நாலாவது பலம் பொருந்திய வல்லரசு ஒன்றின் நோக்கத்தை முறியடித்த சாதனைக்கு உலக வரலாற்றிலே ஈடு இணை காண்பது அரிது.

**அழிபடுவோம் ஆனால் அடிமைப் படோம் !!**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பார்க்க அதிஷ்டசாலி என்றுதான் சொல்லவேண்டும். 'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென் தோள் முளரி மருங்கின் முதியோளின் சிறுவன்' போர்க்களம் சென்று விழுப்புண் பெற்று வீழ்ந்த புறநானூறு கண்ட வீரம். இன்று அவன் போன்ற சிறுவர்கள் பலரும் வீராவேசமும், இனப்பற்றும், நாட்டுப் பற்றும் கொண்டு பிரபாகரன் பின்பு அணிவகுத்து நிற்கிறார்கள். சிறுவர்கள் மட்டுமா? இளம் வீராங்கனைகள் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டு வீராங்கனைகளாய் பவனி வருகின்றனர். இவர்கள் வெறும் கூலிப்பட்டாளங்கள் அல்லர். 'மானம் பெரிதென்று எண்ணி வாழ்வு சிறிதென்றெண்ணும்' மறத் தமிழ் வீராங்கனைகள் இவர்கள். உயிர் வாழ்க்கையின் தந்தக் கோபுரக்கனவுகளுக்கும் இவர்களுக்கும் வெகுதூரம். நம் முந்தையரது மண்ணை மீட்டிட இவ்வள்வு தொகையான பெண்கள் களவேள்விக்குத் தம்மை ஆகுதியாக வழங்க முன்வந்தமைக்கு உலக வரலாற்றிலே வேறு சான்றுகளே இல்லை என்று துணிந்து கூறலாம்.

**நம் முந்தையரது மண்ணை மீட்டிட இவ்வளவு தொகையான பெண்கள் களவேள்விக்குத் தம்மை ஆகுதியாக வழங்க முன்வந்தமைக்கு உலக வரலாற்றிலே வேறு சான்றுகளே இல்லை என்று துணிந்து கூறலாம்.**



இத்தனைக்கும் 1954-11-26 இல் பிறந்த பிரபாகரனுக்கு இன்னும் முப்பத்தியாறு வயதுகூட முடியவில்லை. வயதில் இளைய அவர் அனுபவ முதிர்ச்சி மிகுதியும் பெற்ற பெரும் வீரர், சாதனையாளர்.

தமிழ் மாணவர் பேரவை பலம் பொருந்திய இயக்கமாக வளர்ந்தது. இதில் தீவிரவாதக் குழுவாக தங்கத்துரை, சின்ன ஜோதி, பிரபாகரன் ஆகியோர் இயங்கினர். தொடக்க காலத்தில் கைக்குண்டுகள் செய்யவும் துப்பாக்கி சுடுவதற்கும் இவர்கள் பயிற்சி பெற்றனர். பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் தங்கத்துரை. எனவே அவருடன் பிரபாகரனுக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. இந்தத் தீவிரவாதக் குழுவில் இருந்தவர்களில் சுமார் இருபத்தைந்து பேருக்கு மேற்பட்டோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அரச பஸ் ஒன்றை எரிப்பது என முடிவு செய்தார்கள். நான்கு பேர் இதற்கான பொறுப்பை ஏற்றுச் சென்றார்கள். ஆனால், மற்ற மூவரும் நடுவிலேயே பயம் கொண்டு திரும்பி ஓடிவிட்டார்கள். 14 வயதுச் சிறுவனான பிரபாகரன் மட்டும் தைரியமாகச் சென்று அரச பஸ்சைக் கொழுத்திவிட்டுத் திரும்பி வந்தார்.

மாவட்ட நில அதிகாரியாகவும் சமயப் பற்று நிறைந்தவராகவும் 'மிதித்த இடத்தில் புல் சாகாத' பரம சாதுவாகவும் விளங்கிய ஒரு தந்தைக்கு மகனாகப் பிறந்த பிரபாகரன், தமிழீழ மீட்புக்கு அரசியற் போராட்டமோ அஹிம்சைப் போராட்டமோ உதவாது என்று தமது பிஞ்சு வயதிலேயே உணர்ந்துகொண்டு, துணிவோடும் தன்னம்பிக்கையோடும் செயற்பட எடுத்து வைத்த முதல் அடி இது. அடி என்று சொல்வதும் தவறு, மறத்தமிழ் வீர பரம்பரையாகிய ஏணியின் முதற் படியிலே கால் பதித்தார் என்பதே பொருந்தும்.

பொருளாதார வசதி, சமூக அந்தஸ்து என்பன குறைவின்றி அமைந்த இளைஞன் ஒருவன், - விரும்பியிருந்தால் தனது படிப்பைத் தொடர்ந்து, காலனித்துவ ஆட்சியின் எச்ச சொச்சமான உத்தியோகமும் பெற்றுப் பகட்டாகவும் இன்பமாகவும் வாழ்ந்திருக்கலாம். தனக்கே, தனக்கென்று வாழ விரும்பும் சுயநலமிகளுக்குத்தான் இந்த வாழ்க்கை பொருத்தமாக இருக்கலாம். பிரபாகரனுக்கு அல்ல. மகாபாரதத்தில் அவர் படித்த வீமன், கர்ணன் ஆகிய







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


**உலகப் போர்களின் வரலாற்றில் பிரபாகரனைத் தலைவராக ஏற்ற விடுதலைப் புலிகளின் சாதனைகள் தனி அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்றன. உலகம் அடிக்கடி காணமுடியாத அற்புதம் இது. அந்த அற்புதத்தின் மூலநாயகன் பிரபாகரன்.**



கதாபாத்திரங்கள் நெப்போலியன், சுபாஸ் சந்திரபோஸ் போன்ற மாவீரர்கள், இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என்போரின் வாழ்க்கை வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் உள்வாங்கி ஜீரணித்த அவருக்கு தானே வரலாறு படைக்க வேண்டும் என்ற எண்ணமும், அவாவும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டதில் வியப்பில்லை. அன்பான பெற்றோர், பாசம் நிறைந்த உடன் பிறப்புக்கள் உற்றார், உறவினர் ஆகியோரை எல்லாம் விட்டுத் தியாகம் செய்த அவர் வரலாறு, மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

பிரபாகரன் தன் தோழருடன் இருந்த இடத்திற்கு சென்று அவரை அழைத்து வந்த தந்தைக்கு அவர் கூறிய பதில், அவரின் தீர்க்கமான முடிவை நன்கு புலப்படுத்துகின்றது. "குடும்பப் பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். எனக்கு ஒரு பொறுப்பு மில்லை. குடும்பத்திற்கோ நான் ஒரு போதும் பயன்பட மாட்டேன். என்னால் உங்களுக்கு எத்தகைய தொல்லையும் வேண்டாம். என்னை என் போக்கில் விட்டு விடுங்கள். இனி எதற்கும் என்னை எதிர்பார்க்காதீர்கள்."


தனி மனிதனாக நின்று ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு இடைவிடாத தலையிடியைக் கொடுத்துத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக விளங்கினான் சிவகுமாரன். அவனது இலட்சியத்தை இதயத்தில் ஏற்றுக்கொண்ட பிரபாகரன் அதற்கு இயக்க வடிவம் கொடுத்து வளர்த்தெடுக்க அடிப்படையாய் அமைந்தவை அவரது தியாகம், சொல்லும் செயலும் ஒன்றாய் அமைந்த நேரிய போக்கு, சத்திய ஆவேசம், கொள்கையில் கொண்ட அமுங்குப்பிடி என்பனவே. இவற்றால் கவரப்பட்டு மாத்தையா, கிட்டு, பேபி, ரகு, இரவீந்திரன் (பண்டிதர்), செல்வநாயகம், அன்ரனி, சங்கர், குமரப்பா, புலேந்திரன், சந்தோசம் முதலாக ஆற்றலும், இலட்சியப் பிடிப்பும், தியாக வெறியும் கொண்ட இளைஞர் கூட்டம் ஒன்று அணிதிரண்டது. அது சிறிது சிறிதாக இன்னும் பல மாவீரர்களை இழுத்துத் தனக்கு ஆட்படுத்திக்கொண்டது.

எதிரிகளின் கைகளில் அகப்பட நேரும் சூழ்நிலைகளில் சைனைட் அருந்தி மரணத்தைத் தழுவுதல், கழுத்தில் விழுந்த மணமாலை கருக முன்னரே தம் இன்னுயிரை மரண தேவதைக்குப் பலியாக்கல், மரணத்தைத் தாமே எதிர்கொண்டு சென்று பகைவர் பாசறைகளைப் பூண்டோடு அழித்தல், சாகும்வரை நீர் கூட அருந்தாது உண்ணாவிரதமிருத்தல், பசி, பட்டினி, நோய் முதலிய இடையூறுகளையெல்லாம் மாளாத மனவுறுதியோடு தாங்கிக் கொண்டு வனவாசம் செய்தல், பெற்றோர், உடன்பிறப்புக்களின் பந்த, பாசங்களை பற்றற்றுத் துறத்தல், துரோகி தனது சொந்த இரத்த உரித்தினன் என்றாலும் அவனைக் கொன்றொழிக்கவும் தயங்காமை முதலாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்தவையும் செய்து வருகின்றனவுமான மாபெரும் தியாகங்களின் வரலாற்றிலே, ஒளி சுடரும் தீபமாக விளங்கி வருகிறார் பிரபாகரன்.

போரும் வீரமரணமும் மட்டும் குறித்த இலட்சியத்தை அடைவதற்கு போதியவையல்ல. இராஜதந்திரமும் அரசியல் ரீதியான நிகழ்கால எதிர்காலத் திட்டங்களும் வேண்டியவையே என்பதிலும் பிரபாகரனுக்கு அழுத்தமான நம்பிக்கையுண்டு. தேசியவாதம் பேசியோர், பாரத நாட்டின் அனுசரணையோடு தற்காலிகமானதும், பெரும் பயனை நீடித்து நின்று விளைவிக்காததுமான உடன்படிக்கைக்கு அவாவியோர் எல்லோருமே தங்களுடைய வேஷங்களைக் களைந்து தம்மை வெளிப்படுத்தி மக்களுக்குக் காட்டி, அரசியல் அரங்கிலிருந்து







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மறைந்துபோக வைத்த சாணக்கியம் மிகவும் பாராட்டத்தக்கதாகும். பேரினவாத அரசோடு சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தியும், ஒரு கட்டத்தில் யுத்தநிறுத்தப் பிரகடனம் செய்தும் அதன் முகமூடியைக் களைந்து எறிய வைத்து அதன் உள்நோக்கத்தை உலக அரங்கில் வெளிப்படுத்தியதும் சாமானியமான அரசியல் தந்திரம் அல்ல.

அரசியல் தந்திரம் ஒரு புறம், போர்த் திறன் மறுபுறம் ஆக இருமுனைச் செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவதிலேயே பிரபாகரனுடைய வெற்றிகள் தங்கியுள்ளன. 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆம் திகதி திருநெல்வேலியில் அவர் தமது சகாவான செல்லக்கிளியின் தலைமையில் சென்று ட்றக்கில் வந்த பதின்மூன்று சிங்களச் சிப்பாய்களைப் பிணமாக வீழ்த்திய சாகசம் மகத்தானதாகும்.

"1983 இல் தமிழ்க் கலாச்சாரத்தின் காவலரணாய் அமைந்த யாழ்ப்பாணத்தில் இலங்கையரசின் இராணுவத்தின் மீது பேரச்சம் ஊட்டும் வகையில் அவர் பதுங்கல் தாக்குதல் ஒன்றை நடத்தினார். கதை கதையாகப் பேசுவதற்குரிய இந்தத் தாக்குதல் இலங்கையரசினை அதன் முள்ளந்தண்டுவரை நடுங்க வைத்தது. இதனால் விறைத்துச் செயலற்றுப் போன அரசு எதிர் நடவடிக்கை எடுக்கும் முன்பே, சிங்களக் குண்டர் கூட்டம் இதற்குப் பழிவாங்கும் வகையிலே கொழும்பில் தமிழருக்கு எதிரான கலகத்தில் இறங்கியது. இந்தத் தாக்குதல் சிங்களவரின் அறிவை மயக்கி அதிர வைத்தது தெளிவு."

தேசியவாதம் பேசியோர்,
பாரத நாட்டின் அனுசரணையோடு
தற்காலிகமானதும்,
பெரும் பயனை நீடித்து நின்று
விளைவிக்காததுமான
உடன்படிக்கைக்கு அவாவியோர்
எல்லோருமே
தங்களுடைய வேஷங்களைக்
களைந்து தம்மை வெளிப்படுத்தி
மக்களுக்குக் காட்டி, அரசியல்
அரங்கிலிருந்து மறைந்துபோக
வைத்த சாணக்கியம் மிகவும்
பாராட்டத்தக்கதாகும்.



பிரபாகரன் போர்க்கலையில் தேர்ந்தவர். குறிபார்த்துச் சுடுவதில் ஈடில்லாத திறைமைசாலி. ஆயுதங்கள் பற்றிய தேர்ந்த அறிவு அவருக்கு உண்டு.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் கெரில்லா போர்முறையையும் கடந்து, நேரடி மோதல்களிலும் தலைசிறந்து விளங்குகின்றனர். நெல்லியடி இராணுவமுகாம் அழிப்பும், கோட்டையைக் கைப்பற்றியதும், மாங்குளம் முகாமைப் பிடித்ததும் புலிகளின் போராற்றலுக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாய் விளங்குகின்றன. இவை பிரபாகரனின் போர்த்திட்டத்திற்கும், திறனுக்கும் கட்டியம் கூறுகின்றன. மாவீரர்களின் சாவைத் துச்சமெனக் கருதும் உளப்பாங்கிற்கும் திட்டம் வகுத்திடும் திறனுக்கும் வீரசாகசங்களுக்கும் பிரபாகரனின் பின்னணி ஊக்குவிப்பும் வழிகாட்டலும் துணை நிற்கின்றன.

குண்டு வீச்சு விமானங்களின் குண்டுப் பொழிவு ஒரு புறம், கடற் பீரங்கிகளினதும் ஷெல்களினதும் தாக்குதல் இன்னொரு புறம், ஹெலியின் அடாவடித்தனம் மற்றொருபுறம் என்று பலமுகத் தாக்குதலுக்கு ஈடு கொடுத்து எதிர்த்து நிற்பதும், எதிரிகளை, அவர்களின் மூலபலங்களை அழித்தொழிப்பதும் சாதாரண விசயங்கள் அல்ல. உலகப் போர்களின் வரலாற்றில் பிரபாகரனைத் தலைவராக ஏற்ற விடுதலைப் புலிகளின் சாதனைகள் தனி அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்றன. உலகம் அடிக்கடி காணமுடியாத அற்புதம் இது என்று கூறலாம். அந்த அற்புதத்தின் மூல நாயகன் பிரபாகரன்.

## முடிவுரை

பேரினவாதத்தை எதிர்த்து ஈழத்தமிழ் மக்கள் தங்கள் மண்ணை மீட்கும் போராட்டம் இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து நிகழலாம். ஆனால் வெற்றி ஒருநாள் நிச்சயம் கிட்டும். அந்த வெற்றிப் பிரவாகத்துக்கு மத்தியில் பிரபாகரனின் நாமம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்பது ஐயமில்லை.







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இரண்டாம் உலகப் போரிலே ஜேர்மனிய சர்வாதிகாரியான கிட்லர், யூதரை இலட்சக்கணக்கிலே கொன்று குவித்தான். முதியோர், இளைஞர், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி அழித்தொழித்தான். உலகின் எந்த மூலையிலும் யூதர் என்ற சாதியினர் இல்லாது முற்றாக துடைக்கப்பட்டனர் என்றே உலகம் நம்பியது. ஆனால் யூதசங்காரத்துக்குத் தப்பிப் பிழைத்த சிலர், பலராகி அவர்களின் ஆதிவதிவிடமான இஸ்ரவேலில் அவர்களின் தனியரசு உருவாகிவிட்டது. அது உலகின் சவால்களுக்கு அஞ்சாது முகம் கொடுத்து வருகிறது.

போலந்தில் இரண்டாவது உலகப்போரின் போது யூதர்களில் பெரும்பாலான குடிமக்களை அழித்துவிட்டு எஞ்சியோரை "கெட்டோ" என்ற யூதர் சேரியில் ஜேர்மனியர் குடியேற்றினர். அதனோடும் விடாது அவர்கள் தங்கியிருந்த வீடுகளிலிருந்தும் அவர்களை அப்புறப்படுத்தித் தொழில் முகாம்களில் அடைத்தும், தேசப்பிரஸ்டம்செய்தும், சித்திரவதை செய்தும் வருத்தினர். இத்தகைய வெளியேற்ற நாடகம் ஒன்றில் அலிசியா என்ற யூதச் சிறுமியும், அவள் தமையன்மாரும் தாயும் ஜேர்மனிய பொலிசாரினால் சுற்றிவளைக்கப்பட்டு வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அந்த வேளையில் துயரமும், கோபமும், கண்ணீருமாக நின்று கலங்கிய அலிசியாவை நோக்கி அவள் தமையன் கூறிய வாசகங்கள் இவை;

"போர் முடிவுற்றதும் நாங்கள் ஒரு நாள் வீட்டுக்குத் திரும்புவோம், இந்த அவலம் நீடிக்கப் போவதில்லை."

தமிழனுக்கு தனிநாடு இல்லாத பழி துடைக்கப்படும். துன்பப் புயலிலும், அச்சப் புயலிலும் அகப்பட்டுச் சீரழிவோர் தமது நலம் மறந்து, இன நலமும், மண் பற்றும் மிக்கவர்களாய் சீறியெழுந்து போராட்டத்தில் பங்காளர்களாய் மாறுவர்; மாறியாக வேண்டும். அன்று ஈழத் தமிழகத்திலே பிரபாகரன் தலைமையிலே சுதந்திரப் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்திடும். இந்த மண் எங்களின் சொந்த மண். ●

க. சொக்கலிங்கம்

# "நெய்தல்"

## பாடல் ஒலிப்பதிவு நாடா



இவ் ஒலிப்பதிவு நாடா, கடலும் கடல் சார்ந்த பிரதேசமான நெய்தல் நிலத்தின் போராட்ட உணர்வுகளையும் செயற்பாட்டையும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் கலையாக்கி வெளிப்படுத்தி நிற்கின்றது. அண்மையில் தமிழீழம் சென்று திரும்பிய ஒருவர் இந்தப் பாடல்களை தான் பஸ்வண்டியில் வந்தபோது கேட்டதாகவும், இதயத்தை உருக்கும் இந்தப் பாடல்கள் இப்போதும் தனக்குள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன என்றும் சொன்னார். இந்த "நெய்தல்" இசைப்பாடல் நாடாவில் இசையும் பாடல்களும் இதுவரை வெளிவந்த பாடல்களினின்று வித்தியாசமாக அமைந்துள்ளன. இந்தப்பாடல்களின் இசைவடிவம் எங்களுடைய இசைப்பாடல்களின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்களை இணைத்து, விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகமே இந்த "நெய்தல்" என்னும் ஒலிப்பதிவு நாடாவை உருவாக்கியிருக்கின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலையின் பாதையில்



பாரதி

வடமராட்சியில் உள்ள கல்லுவத்தின் செம்பாட்டு மண்ணில் இருந்து புதிய புறம் பாடப் புறப்பட்ட வீரவேங்கை இவள்.

அந்நிய ஆதிக்கம் எம்மண்ணிலே விளைத்த கோரப்பதிவுகளைக் கண்டு கொதித்தெழுந்து, தாயகவிடுதலைக்காய் தம்முயிர் ஈந்த மாவீரர் வரிசையிலே இன்று இவளின் பெயரும்....

பாரதி:

இவள் குடும்பத்தில் ஒரே பிள்ளை செல்லப்பிள்ளை. தங்கள் உயிரினும் மேலாக பெற்றோரால் நேசிக்கப்பட்டவள், போஷிக்கப் பட்டவள்.

வறுமையின் கோரப்பிடி இவளின் குடும்பத்தைப் பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.

எந்த விடயத்திலும் ஆற்றலும், அறிவும் பெறத்தக்க வகையிலே பெற்றோரால் வளர்க்கப்பட்டாள்.

பாரதி தன் தாயை மிகவும் நேசித்தாள். அதனால்தான் அவள் தன் தாய்நாட்டையும் மிகவும் நேசித்தாள்.

பெண்களை பூவையாக எண்ணி நகையாடிய காலத்திலே...

புலியாகி களமாடி இன்று காவியமாய் தமிழீழ வரலாற்றிலே நிறைந்து நிற்கின்றாள்.

1986ஆம் ஆண்டு காலப்பகுதியிலே தனது பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்தி புலிகளின் போராட்டப்பாதையில் பாரதி தன்னை இணைத்துக்கொண்டாள்.

1987ஆம் ஆண்டு மகளிர் படையணியின் 2வது பயிற்சி முகாமுக்காக பெண்போராளிகள் தெரிவு செய்யப்பட்டபோது தானும் அதில் பயிற்சி பெற முடியவில்லையே என்று பாரதி மிகவும் மனவேதனைப்பட்டாள். எல்லோரும் பயிற்சிக்குப் போனால் தளத்திலே நின்று வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை. நீங்கள்தான் அப்பொறுப்பை ஏற்றுச் செய்ய வேண்டும் என்று லெப். கேணல் திலீபன் கூறியதற்கிணங்க பாரதி தனது மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள். மகளிர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து பெண்களைப் போராட்டத்துடன் இணைப்பதிலும், பெண்களது சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் வேலைகளிலும் பாரதி ஈடுபட்டாள்.

1987 ஆகஸ்ட் 10ஆம் திகதி இந்திய -தமிழீழ விடுதலைப் போரைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் சகல நிலைகளிலும் வளர்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றது. வல்லரசொன்றுடன் மோதுகின்ற விடுதலைப் புலிகளின் தீரத்தையும் உலகம் கண்டு வியந்து நிற்கின்றது.

குண்டுதுளைக்காத நிலமென அங்குல நிலத்தையேனும் கண்டு கொள்ள முடியாத மணலாற்றுக் காட்டிலே புலிகளின் புதியபடையணிகள் வெகுவிரைவாக பயிற்சியைப் பெறுகின்றன. இக் காலகட்டத்தில் நடைபெற்ற மகளிர் பிரிவின் 4வது பயிற்சி முகாமில்தான் பாரதி பயிற்சியைப் பெற்றுக்கொண்டாள்.

இவள் பயிற்சிக்குச் சென்ற அந்த நாளை நினைத்துப் பார்க்கின்றேன்.... இந்திய இராணுவம் இம்மண்ணில் நிலைகொண்டிருந்த காலம் அது. உண்பதற்குத் தவிர வாயைத் திறக்கவே அஞ்சிய நேரம் அது. இந்நேரத்தில்தான் பாரதியைச் சந்திக்கின்றேன்.

'பயிற்சிக்கு போவமா?' என்று கேட்கிறேன். எனது கையை அன்புடன் பற்றியவள், "அக்கா இந்தமுறையும் என்னை ஏமாற்றமாட்டியள்தானே, கட்டாயம் அனுப்புவீங்கள்தானே" என்று கேட்கிறாள். அதே நேரம் எனது கைகளில் இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுகிறது.

ஆச்சரியத்துடன் பாரதியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன்.

"அக்கா நான் நல்ல தெளிவோடும் உறுதியோடும் இருக்கிறேன்."

இது பாரதியின் பதில். எனக்கு இன்னும்விடை பிடிபடவில்லை. இவள் ஏன் அழுகிறாள்?

இப்பொழுது அவளது நாட்குறிப்பை பார்க்கும்பொழுதுதான் அவள் அடிமனதின் ஆழத்தில் புதைந்திருந்த சோகம் தெரிகின்றது.

வயிற்றுப்பாட்டிற்கே வழியின்றி வாடும் ஓர் எலும்புக்கூடு அவளின் தாய், தன் செல்ல மகள் திரும்பிவருவாள் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்ற அந்த ஏக்கம் நிழலாடுகின்றது.

அவளின் இறுதிக்கிரிகைகளின்போது அழ மறந்துபோய் ஒவ்வொரு போராளிகளினதும் முகத்திலே தன் அருமை மகளை அடையாளம் காணத்துடிக்கிற அந்த தாயின் முன்னே... பேச

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


வதற்கு வார்த்தைகளற்றுப் போகிறோம்.

பாரதி, வானதி, கஸ்தூரி இவர்கள் மூன்றுபேரும் ஒரே பயிற்சி முகாமிலே பயிற்சி பெற்றவர்கள். நெருங்கிய தோழிகள்.

இவர்கள் கையிலே இருந்த துப்பாக்கிகளுக்கு இருந்த வேகம் இவர்கள் கரங்களிலே இருந்த பேனாவுக்கும் இருந்தது.

ஒருபுறம் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகப் போர் தொடுத்தது இவர்களது துப்பாக்கி. இன்னொருபுறத்தில் சகல ஒடுக்குமுறை சக்திகளுக்கும் எதிராக மக்களை விழிப்படையச் செய்வதில் இவர்களது பேனா பெரும் பங்காற்றியது.

இந்திய இராணுவத்தை இம் மண்ணில் இருந்து விரட்டியடித்த துப்பாக்கி வேட்டொலிகளில் எல்லாப் போராளிகளையும் போல பாரதியின் துப்பாக்கியோடு சேர்ந்து அவளது பேனாவுக்கும் கணிசமான பங்கு இருந்தது.

1990ம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் பாரதி ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை.

தமிழீழ மாணவ சமுதாயம் சரியான செல் நெறி ஒன்றுக்கூடாக வளர்த்துச் செல்லப்பட வேண்டும் என்பதில் பாரதி மிகுந்த அக்கறை கொண்டிருந்தாள்.

இந்நேரத்தில்தான் மீண்டும் ஸ்ரீலங்கா -தமிழீழ விடுதலைப் போர் ஆரம்பமாகியது. இப்போரிலே மாணவர்களை முழுமையாக பங்களிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பாரதி தானும் சண்டைபிடிக்க வேண்டும் என்று எம்முடன் சண்டையிட்டுக்கொண்டு களம் செல்கின்றாள்.


இராணுவக் காவலரண்களை அவதானிப்பதற்காக சென்றுகொண்டிருந்த வேளையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்து கொள்கிறாள்.

மீண்டும் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட பாரதி மகளிர் முன்னணியின் துணைப்பொறுப்பாளராகவும் செயற்பட்டாள்.

பாரதியுடன் பழகுவது என்பது ஓர் வித்தியாசமான அனுபவம்.

இவள் இயற்கையை நேசிப்பவள்; இயற்கையை ரசிப்பவள்; இந்த இயற்கையிலே எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதை காணச்சகிக்காதவள்.

மாவீரர் நினைவில்லங்களில் கூட மலர் பறித்திட்டு வணக்கம் செலுத்துவதை இவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வேண்டுமானால் ஒவ்வொரு கல்லறைகளுக்கு அருகிலும் ஒரு நந்தவனத்தை உருவாக்குங்கள். அவை பூத்துச் சொரிந்து எம் வீரர்களை ஆராதிக்கட்டும் என்று கட்டளை இடுவாள். இவ்வாறான மிகவும் இளகிய மனதைக் கொண்ட இவளால் எம் தாயக மண் அங்குல அங்குலமாக பறிக்கப்படுவதை சகித்துக்கொண்டிருக்க முடியுமா? விடியலைப் பிரசவிக்க வித்தான மாவீரர் வரிசையிலே எங்கள் பாரதியும். . . .



பாரதி! "நீ விட்டுச் சென்ற ஆயுதத்தை ஏந்திக் கொண்டு ஆயிரமாயிரமாய் விடுதலைப் பாதையிலே வீரர்கள் அணிவகுக்கின்றார்கள். நீ பத்திரப்படுத்தி வைத்திருந்த உனது பேனா, அதை என் கைகளில் எடுத்துள்ளேன். இனி ஆயிரமாயிரமாய் இம் மண்ணுக்காய் தம் இன்னுயிரை அர்ப்பணித்த தோழர்களின் வரலாற்றை அது பதிவு செய்யும்".

**புதியவள்**

# கடல் தொழில் பயிற்சி

தற்போது நடைபெறும் போராட்ட காரணத்தால் எமது கடற்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிப்பு குறிப்பாக ஆழ் கடல் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்டுள்ளது. உடனடியாக அவர்களுக்கு உதவுவதுடன் தொழில் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் இத் தொழிலைத் திறமையாகச் செய்வதற்குத் தேவையான அடிப்படை கடல் தொழில் பயிற்சியை வழங்குவது அத்தியாவசியமாகிறது. இத்தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் கடற் தொழில் பயிற்சி நெறிகள் தமிழீழத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப் பயிற்சி நெறி தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் கற்பிக்கப்படும். உலகம், ஸ்ரீலங்கா, தமிழ்ஈழம் பற்றிய புவியியல் அறிவும் அவர்களுக்கு கற்பிக்கப்படுவதோடு பருவகாலங்கள், மீன் வகைகள், கடல் உணவு, உபகரணங்கள், முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் பயிற்சி அளிக்கப்படும். சிறந்த கடற் பயிற்சி தொழிலாளர்களை உருவாக்கும் வகையில் இப்பயிற்சித் திட்டம் அமைக்கப்படவுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




ஆயுதம் செய்வோம்
நல்ல காகிதம் செய்வோம்
பாரதியின் கனவு நனவானதோ
பட்டினி கிடந்தாலும்
கண்கள் துஞ்சினாலும்
உடல் சோர்ந்தாலும்
ஒய்வு எமக்கு வேண்டாம்
ஆவியொடுங்கினாலும்
தமிழீழமே மூச்சென்று
எழுந்து நிமிர்ந்தவர்கள் இவர்கள்.
வீரமும் தியாகமும்
ஒன்றிணைந்த போராட்டத்தின்
அழியா நினைவுச் சின்னம்
பூமியைப் பிளந்து
புத்துயிர் பெறும்.
கற்றாளைச் செடிபோல் நாம்
எழுவோம். நிமிர்வோம்.

இரா. அன்பரசி

ஆணோடு பெண்ணினமும்
அடிமைப் போருக்கு
உயிரைப் பயிராக்கி
உலகில் பெண்ணினமும்
யாது சக்திக்கும்
அடிமையில்லையென
உயர்ந்த
காவல் தெய்வங்கள்.

எறிக்கும் வெய்யிலும்
இடி மழை மின்னலும்
இவர்களை
ஏது செய்திடப் போகும்.
பூமழை தூவிய
பூஞ்சோலையல்ல
அவர்கள் நடந்த பாதை

சுடு மணலும்
நெருஞ்சி முள்ளும்
துருத்தும் கற்களும்
துளைத்த கால்கள்
இவையென
கள்ளி முள் மேலேயே
மேடைபோட்ட
காவல் தெய்வங்கள்.
விரிந்த கண்களும்
தொங்கிய நாக்கும்
கைகளில் வாளும்
வெட்டிய தலையுமாய்
கற்பனைக் காட்சி தரும்
காளித் தெய்வங்களல்ல.

குருதியும் சதையுமாய்
உருக்கிலும் உறுதியாய்
நெருப்பாய் நின்று
எதிரியை வென்றவர்.

உயிர் விதையாய்;
விடுதலை அறுவடைக்காய்
எழுந்த எம்
காவல் தெய்வங்கள்.

க. அரியநாயகம்.

## மீண்டும் புலிக்கொடி பறக்குது !

தலை மீது வானம் விழினும் தடுக்கும்
தமிழீழ விடுதலைப் புலி வீரா உனக்கு
சிலை ஒன்று நாட்டி அஞ்சலி செய்தோம்
செந்தணல் கக்கி தீமைகள் தடுத்த வீரனே
மலை மீது விளக்காய் மனதில் இருப்பாய்
மண் மீட்க வந்தாய் மாந்தமிழ் தீரனே
அலை மீது கடலில் படகோடும்
அதுபோல நெஞ்சக்கடலில் நினைவு ஓடும்


நிலையாகும் விடுதலைப் போராட்டம்
நினைவோடு விடிவாகும் விடுதலை
கலையாகும் உங்கள் கைவண்ணம்
களத்தினில் காட்டினீர் அவ்வண்ணம்
விலையாகும் பொருள் இல்லை சுதந்திரம்
வேள்விக்கு நெய்யாகி விடுதலை தந்தீர்.
சிலையாக நின்று பொருள்தந்த புலிவீரா
சிந்தையில் உமை நாம் மறப்போமோ

பொற்கொடி ஏந்திய தமிழ்ப் புலி வீரா
போற்றி வணங்கினோம் இதய அன்போடு
விற்கொடி ஏற்றினான் சேரன் இமயத்திலே
வையம் வியக்க புலிக்கொடி ஏற்றினான்
ஈழத்திலே சோழன்;
நற்கொடி நந்திக்கொடி சங்கிலியன்
நல்லூரில் ஏற்றினான்;
பொற்கொடி மங்கையர் பெண்புலிகள்
போர்க்கொடி உயர்த்தினர் தமிழீழத்திலே!
மீண்டும் புலிக்கொடி பறக்குது !!

- ஈழமைந்தன் -, போர்லின்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




தமிழ்த் தேசிய இனத்தின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் தீவிரமடைந்த காலகட்டத்தில் வாழ்கின்றோம். ஒரு தேசிய இனம் என்பதை வரையறுக்கும் முக்கிய அலகுகளில் ஒன்றாக, அதன் தனித்துவமான பண்பாடு அமைகின்றது. பண்பாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக, அதன் பாரம்பரிய -புதிய இலக்கியங்கள் உள்ளன. அண்மைய கால உணர்வு வெளிப்படுவதனால் புதிய இலக்கியங்களே கூடுதலான கவனிப்பைப் பெறுவனவாகியுள்ளன.

மக்களின் வாழ்வு நிலைகள், நம்பிக்கைகள், ஆசாபாசங்கள், பிரச்சனைகள், ஒடுக்குமுறைகள் - போராட்டங்கள், மொழிப்பயன்பாடு போன்றவை 'இரத்தமும் சதையுமாக' இலக்கியங்களில் வெளிப்பாடு கொள்கின்றன. இந்தியத் தமிழகத்திலுள்ள தமிழரிலிருந்து தமிழீழத் தமிழர், பல்வேறு அம்சங்களில் வேறுபட்டு -தனித்துவம் கொண்டுள்ளனர். எனவே, எம்மை வெளிப்படுத்தும் உயிர்ப்புடைய இலக்கியங்கள் எம்மவரால்தான் -தமிழீழ மண்ணில்தான் படைக்கப்பட முடியும்; எமது மண்ணின் மணத்தையும், காற்றின் அசைவையும், எமது மக்களின் இதயத்துடிப்புக்களையும் இந்த மண்ணைச் சேர்ந்தவர்களினால்தான் வெளிப்படுத்த முடியும்.

இந்த நூற்றாண்டின் முப்பதாம் ஆண்டுகளில் விழிப்புணர்வுடன் உருவாகத் தொடங்கிய ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியம் நாற்பதுகளிலும் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் மேலும் தீவிரச் செயற்பாட்டைப் பெற்றது; இற்றைவரை பல்நூற்றுக்கணக்கான - சிறுகதை, கவிதை, நாவல், விமர்சன நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும் எமது மக்கள் மத்தியில் இவை பரவலான கவனிப்பைப் பெற்றிருக்கின்றன என்றோ, எமது எழுத்தாளர்களை -கவிஞர்களை -மக்கள் பரவலாக அறிந்திருக்கின்றார்கள் என்றோ கூறமுடியாது. எமது மாநகரசபை -நகரசபை -சனசமூகநிலைய - பாடசாலை நூல்கள் பெரும்பாலானவற்றில் ஈழத்து நூல்களைக் காணமுடியாது. சில நூலகங்களில் ஓரளவு நூல்களைக் காணலாமாயினும், அவை பலராலும் விருப்புடன் பாவிக்கப்படாதவையாக -புறக்கணிக்கப்பட்டவையாக இருக்கும் அவலநிலையை அவதானிக்கலாம்.

எமது வாசகர்களில் பலருக்குத் தமிழகத்தைச் சேர்ந்த ராஜேஷ்குமார், ராஜேந்திரகுமார், புஷ்பாதங்கத்துரை, சுஜாதா, பாலகுமாரன், சிவசங்கரி, வாஸந்தி போன்ற எழுத்தாளர்களை (இவர்கள் வெறும் பொழுதுபோக்கு -ஜனரஞ்சக, வியாபாரக் கவர்ச்சி எழுத்தாளர்கள். இவர்கள் தம்மைச் சூழவுள்ள யதார்த்த வாழ்க்கையை எழுதுவதுமில்லை; கலையழகற்ற இவர்களின் எழுத்துக்களால் தமிழ்மொழிக்கு எவ்வித பயனுமில்லை) தெரிகிறது. ஆனால், எமது மக்களின் வெவ்வேறு நோக்குக் கோணங்களில் - மண்ணின் மணம் கமழ -வளமான மொழிச்சிறப்போடும் உணர்வு நலனோடும் கலைப்படைப்புகளாக -ஆக்கித் தந்துள்ள இலங்கையர்க்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கோன், சி. வைத்திலிங்கம், அ. செ. முருகானந்தன், வ. அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத்துரை, மு. தளையசிங்கம், நந்தி, ரஞ்சகுமார், உமாவரதராஜன் போன்ற புனைகதை எழுத்தாளர்களையோ, மகாகவி, தா. இராமலிங்கம், நீலாவணன், காசிஆனந்தன், முருகையன், மு. பொன்னம்பலம், சு. வில்வரத்தினம் போன்ற கவிஞர்களையோ பற்றித் தெரிவதில்லை; தெரிந்துகொள்ள வேண்டிய ஆர்வமுமில்லை!

பல்வேறு இலக்கியக் குழுக்களினதும் கடந்தகாலச் செயற்பாடுகளில் நிகழ்ந்த பல தவறுகளை, இதற்கான காரணங்களாகக் காட்டலாம். எனினும் அடிப்படையானதாகவும் தீங்கு விளைவித்து வருவதாகவும் இருப்பது, எமது மக்களிடம் -வாசகர்களிடம் இருந்துவரும் இந்திய (தமிழ்) மயக்கம் ஆகும்; இலக்கியம், திரைப்படம், சஞ்சிகைகள் என்றால் தமிழகத்திலிருந்து வருவதே சிறந்தது என்ற 'குருட்டு நம்பிக்கை' ஆழமாக வேரோடியிருக்கின்றது. இந்தக் குருட்டு நம்பிக்கையின் ஆணிவேர் பிடுங்கப்பட வேண்டும். 'எங்கள் மண், எங்கள் எழுத்தாளர் -எங்கள் நூல்கள்' என்ற உணர்வு எம்மிடையே ஏற்பட வேண்டும் -தமிழீழத்து நூல்களை எமது மக்கள் படிக்க வேண்டும் -வாங்கி ஆதரவு காட்ட வேண்டும்.

தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் கூர்மை அடைந்துள்ள இன்றைய நிலையில், இவ்விழிப்புணர்வு தவிர்க்கப்பட முடியாததாகும்; அதற்குரிய செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலைகளின் உயர் வகுப்புக்கள், பல்கலைக்கழகம், சனசமூக நிலையங்கள் என்பவற்றில் இந்தச் செயற்பாடுகள் தொடங்கப்பட வேண்டும். 1956 ஆம் ஆண்டில் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய பண்பாட்டு மலர்ச்சியின் -அதனைப் பேணுவதற்கான முயற்சிகளின் -செயற்பாட்டுத் தளங்களாக இவ்விடங்களே அமைந்திருந்தன என்ற வரலாற்று உண்மையை, இங்கு நாம் கவனத்திலெடுப்பதும் நல்லது. ●

அ. ஜேசுராஜா

# கவிஞர் அல்லை ஆறுமுகம்

வயோதிபம்,
வறுமை,
சுகவீனம்

உடல் தளர்வுற்று நடக்கமுடியாத நிலையிலும் இலக்கிய உணர்வோட்டத்துடனும் தேடலுடனும் இருக்கும் மனிதன்.

கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் எனப் பல வடிவங்கள் ஊடாகவும் இந்த மண்ணுக்குச் சேவை புரிந்தவர்.

சிறுகதை, கட்டுரை, நாடகம் என எழுதியபோதும் இவர் கவிஞராகவே அடையாளம் காணப்பட்டவர். பல படைப்புக்களை உருவாக்கிய போதும், இவரின் சில கவிதைகள் மட்டும்தான் "அடைப்புக்குறிகள்" என்ற நூலாக வெளிவந்தது. பல கவிதைகள் நூலுருப்பெறாமல் உள்ளன.

பதினைந்து சிறுகதைகளையும், ஆறு மேடை நாடகங்களையும், பல கவிதைகளையும் படைத்த இந்த மனிதன் தனது படைப்புகளினூடு அங்கத நகைச்சுவை உணர்வுடன் அரசியல் பிரச்சனைகளை வெளிப்படுத்திய விதம் கவனிப்புக்குரியது. இவர் எழுதி நூலுருப்பெறாத இலக்கியங்களும், சேகரித்துவைத்த பல அரிய நூல்களும் வாழ்ந்த வீடும் ஸ்ரீலங்கா இராணுவத்தால் எரியூட்டப்பட்டன. உட்கார்ந்து கதைக்கமுடியாதபடி உடல் நடுக்கம். நடக்கமுடியாத வாதநிலை. ஆனாலும் இலக்கியம் பற்றிப் பேசும்போது உணர்வு ததும்ப கவிதைகளின் இரசனைகளைக்கூறும் உற்சாகம். மாயாகோவஸ்கி, கோசிமின், பாப்லாநெருடா, பாரதி போன்ற கவிஞர்களின் கவிதா உணர்வுகளை அனுபவித்துக்கூறும் இரசனை!! தன்னுடைய கவிதைகள் இராணுவத்தால் எரிக்கப்பட்டாலும் அக்கவிதைகளை மனப்பதிவுகளாக வைத்துக்கூறும்போது நெஞ்சில் துயரம் பீறிடுகின்றது. தனது "அடைப்புக்குறிகள்" கவிதை நூல்கள் எரிக்கப்பட்டது போக மிஞ்சியவற்றை பக்குவமாக "பொலித்தீன்" பையில் கட்டி வைத்து இருப்பதை, இப்பொழுது வாழும் குடிசையில் இருந்து எடுத்துக் காட்டினர்.

இரண்டு வாங்குகள் படுக்கைக்கு ஏற்றபடி வைக்கப்பட்டிருந்தன. மேசையில் சில புத்தகங்கள், ஒரு கதிரை, குடிசையின் ஒரு பக்கமாக பாத்திரமும் அடுப்பும் இருந்தன. அவரால் இயலாத போதும் தேனீர் தரவேண்டும் என்ற முனைப்பினால் நெருப்பு மூட்டித் தேனீர் தயாரித்துத் தந்தார். அவரின் பண்பையும் ஆதரிக்கும் மனதையும் கண்டு நெஞ்சு வியந்தது. தமிழ் இனத்தின் துயர நிலையையும், தமிழர்களின் போராட்டம் தொடர்பாகவும், தமிழீழத்தின் விடுதலை பற்றியும் முழு பிரக்ஞை கொண்டிருக்கின்றார்.

இந்த மண்ணின் குரலான கவிஞர், பசியிலும் பிணியிலும் வாழுகின்றார். ஒரு கவிஞனின் நிலை, தனது நூல்களை, தான் எழுதிய எழுத்துப் பிரதிகளை பாதுகாக்க முடியாத சோகங்கள் மிகுந்த இடராகவும், பரிதாபத்துக்குரியதாகவும் இருக்கின்றது. ●

எஸ் கருணாகரன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அழகன்



"சொல்லின் முன் செயல்" எனும் தலைவரின் கூற்றை தனது போராட்ட வாழ்வில் திறம்பட வெளிப்படுத்திய வீர வேங்கை மேஜர். அழகன் (செல்வராசா இளங்கோ) 29. 06. 1992 அன்று வெற்றிலைக்கேணித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். சிறந்த போர்வீரனாக மட்டுமன்றி ஈழநாதம் பத்திரிகையின் நிர்வாகப் பொறுப்பாளராகவும் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பணியாற்றி மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். மக்களோடு மக்களாய் இனவிடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த வீர வேங்கை அழகன் மறைந்த செய்தி அவருடன் பழகிய அனைவருக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அன்போடு பழகிய அனைவரும் அவரை "அழகண்ணே" என்று செல்லமாக அழைப்பதுண்டு. தானுண்டு தன்வேலையுண்டு என்று கருதுபவர்கள் எல்லாம் அவரது துணிச்சலை, ஆளுமையை, அவரது புன்சிரிப்பை தட்டிக்கேட்கும் மனிதாபிமான உணர்வை பெருமையாகப் பேசுவதுண்டு.

களத்திற்குச் செல்பவன் களத்திலே வீரமரணத்தை தழுவுவதுதான் அவனது இலட்சியம் என்ற உணர்வை சொல்லாமல் கொள்ளாமல் நிறைவு செய்துவிட்டாலும் அந்த "அழகு" என்னும் ஆளுமையை நாம் எங்குமே இனி காணமுடியாது.

பள்ளிக்கூட வாழ்விலே அவரது இனவிடுதலை உணர்வை கல்லூரி ஆசிரியர்கள் பெருமையாகப் பேசி அவரைப் புகழ்வதுண்டு. சாவகச்சேரி மண் விடுதலையின் விளைநிலம். விடுதலை வித்துக்கள் அந்த மண்ணிலே முதன்முதலாக தோன்றிய காலத்திலே இளைஞரான செல்வராசா இளங்கோவும் 1983ல் தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைத்துக்கொண்டார். நீண்ட நெடும் பயணத்தில் மூத்த உறுப்பினராக பலகளம் கண்டவர் மேஜர். அழகன். தலைவர்கள் கூட அவரை எப்போதும் வாஞ்சையுடன் செல்லமாக "அழகு, அழகு" என கொஞ்சி மகிழ்வதுண்டு. அவரது முகத்திலே இடர்பல வரினும் 'புன்னகை' மறைவதில்லை. சிரித்துச் சிரித்து நிதானமாக பதில் சொல்வதே அவரது தனி 'அழகு'.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கு தனியான பத்திரிகையொன்று அமைக்கப்பட வேண்டுமென்று இந்திய அமைதிப் படை இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்த்காலத்தில் "களத்திலே" அவர் கனவு கண்டார். அவரது கனவை செயற்படுத்துவதற்கு தலைவர் வே. பிரபாகரனின் ஆணை கிடைத்தது.

அதற்கான முயற்சியை இந்தியப்படையை விரட்டிய சில

> ஒருகையில் பேனாவுடனும்
> மறுகையில் துப்பாக்கியுடனும்
> போர்க்களத்தில் நின்று
> எதிரியோடு நேருக்கு நேர் மோதி
> அங்கு நிகழ்ந்தவற்றை,
> உண்மையை
> பத்திரிகைக்கூடாக
> மக்களுக்குச் சொல்லிய
> ஒரு போராளிப்
> பத்திரிகையாளன்தான்
> மேஜர் அழகன்.

நாட்களில் தமிழீழத்தில் நிறைவு செய்த செயல்வீரராக அவர் காணப்பட்டார். இரண்டு ஆண்டுகளாக செயல் வீரராக அப்பணியை நிறைவு செய்துகொண்டிருந்தபோது காலன் அவரைக் கவர்ந்தது எமது துரதிஷ்டமாகும்.


பத்திரிகைக்காக களத்தில் இருந்து செய்தி எடுத்து பிரசுரிக்க வேண்டுமென்ற துணிச்சல் இன்று நேற்று வந்ததில்லை. பல களங்களில் அவர் அப்பணியை திறம்பட நிறைவுசெய்தவர். கட்டைக்காடு இறுதிப்போர் அவரது இலட்சிய வெறியை தடுத்து எமக்கெல்லாம் சோகத்தை வரவழைத்து "ஐயோ அழகண்ணே" என வாய்விட்டுப் புலம்பவைத்துவிட்டது. அவரது பிரிவு தமிழீழ பத்திரிகைத் துறைக்கும் ஒரு பேரிழப்பாகும்.

**சச்சி**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஒரு வீரப்புலியை ஈன்ற அன்னை



தமிழீழ நாட்டின் விடுதலைக்காக போராடிய 'விடுதலைப் புலிகள்' எனும் இளம் தமிழ் வீரர்களை அடக்கி ஒடுக்கவென சிங்கள அரசு அனுப்பிய ஆயுதப்படைப் பிரிவு ஒன்று சாவகச்சேரியை அடுத்த நாவற்குழியில் முகாமிட்டிருந்தது. அப்படையினர் வெளியேசென்று பொதுமக்களுக்கு கொடுமைகள் புரிவதைத் தடுத்து, அந்த முகாமைச் சுற்றி காப்பரண்கள் அமைத்து இரவு பகலாக காவல் புரிந்தனர் புலிவீரர்கள். முகாம் அமைந்த சிறு நிலப்பரப்பை விட்டு வெளியேவந்து நடமாட முடியாத நிலையில் அப்படைகளின் உணவு, தண்ணீர் போன்ற அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் ஹெலிகொப்டர் மூலம் வானிலிருந்து வீசப்படும். முகாம் பகுதிக்கு மேலாக தாழப்பறந்து வரும் 'ஹெலி'கள் தமிழ் வீரரின் படைக்கலங்களில் இருந்து பாயும் குண்டுச்சத்தம் கேட்டு மேலெழுந்து உயரத்தே பறந்து வட்டமிட்டு பொதிகளைப் போட்டுவிட்டுப் போகும். பொதிகள் எல்லாமே முகாமிற்குள் விழுவதில்லை. ஏமாற்றமும் சினமும் அடையும் படையினர் வெளியேறி நகர்ந்து தமிழ் மறவரின் காவலரண்களை நோக்கிச் சுடுவர். இரு படைகளுக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெறும்; இழப்புகளுடன் சிங்களப்படை திரும்பி முகாமுக்குச் செல்லும்.

இந்நிலையில் ஒருநாள் காலை வானில் இரண்டு ஹெலிகள் விரைந்து வந்து வட்டமிட்டு பொதுமக்களைச் சுற்றிச் சுட்டன. வானிலிருந்து சிதறிய குண்டுகளைப் பார்த்து ஓடி ஒளிந்து கொண்ட மக்கள் மேலும் என்ன நடக்குமோ என அஞ்சினர்.

அன்று மாலைப் பொழுதில் ஒரு செய்தி பரவிற்று.

"இன்றிரவு எல்லா 'பொம்மர்களும், ஹெலிகளும்' சேர்ந்து தென்மராட்சிப் பகுதியில் குண்டு பொழியும்" என்ற வதந்தியை உண்மையென நம்பிய மக்கள் இரவிரவாக காப்பகழிகளை வெட்டத் தொடங்கினர்.

அவ்வேளை ஒரு தாய் எதையோ சிந்தித்தபடி தன் வீட்டு வாயிலில் நின்றாள்.

அவளைப் பார்த்து எதிர் வீட்டுப் பெண் "ஏன் நீங்கள் பதுங்குகுழி வெட்டவில்லையா?" என்று கேட்டாள்.

"என் பிள்ளை அங்கே நாவற்குழியில் 'பொம்பரையும், ஹெலியையும்' எதிர்த்து நிற்கிறான், எனக்கெதற்கு பாதுகாப்பும், பதுங்குகுழியும். என் உயிர் மட்டும் என்ன வெல்லமே.....?" எனப் பதிலளித்தாள் அத்தாய்.

அதனைச் செவியுற்ற தமிழ் ஈழ புதுக்கவிஞர் ஒருவர் பாடிய புதிய புறம் வருமாறு;

'பதுங்ககழி அமைக்க
விலையோ என
அங்கோர் பெண்ணை
வினவினாள் அயலவள்.
என் மகன் அங்கே
பொம்பரை, ஹெலியை
விழுத்தக் களத்தில்
நிற்கையில்
என் உயிர் என்ன
வெல்லமோ என்றாள்
ஒரு வீரப்புலியை
ஈன்ற அவ்வன்னை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# செஞ்சோலை







தமிழீழத்தில் ஸ்ரீலங்கா அரசின் இனவாத நடவடிக்கைகளால் பெற்றோரை இழந்த குழந்தைகள், அவர்களின் பராமரிப்பை இழந்த குழந்தைகள், பாசத்திற்கும், ஆதரவிற்கும் ஏங்கித்தவிக்கும் சிறுவர்கள், தங்கிவாழ புகலிடமின்றி அல்லலுறும் சிறுவர்கள் என ஆயிரக்கணக்கானோர் உள்ளனர்,

இவர்கள் ஆதரவற்று தவறான வழிகளில் போகக் கூடாது என்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் 'செஞ்சோலை' பாராமரிப்பு நிலையத்தை தோற்றுவித்துள்ளார்கள். இதை விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி. ஜனனி நிர்வகித்து வருகின்றார். இங்கு 3-16 வயதுக்குட்பட்ட பெண் சிறார்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.







இங்கு பிள்ளைகளுக்கான வாழிடம் மாத்திரமல்ல அவர்களுக்கான மகளிர் பாடசாலையும் நடாத்தப்பட்டு வருகின்றது. இங்கு வாழ்க்கைக்கான கல்வி இவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவர்களின் தனியாற்றல் எத்துறையில் இருக்கின்றதோ அத்துறையில் சிறந்த நிபுணர்களாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது செஞ்சோலை நிறுவனம்.

நிதிநெருக்கடியை எதிர்நோக்கும் இவர்கள் தமிழீழமெங்கும் இசைநிகழ்ச்சிகள் நடத்தி நிதி சேகரிக்கின்றனர்; வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்களையும் இக்குழந்தைகட்கு உதவும்படி கேட்கின்றது செஞ்சோலை நிலையம்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சமுதாயத்தில் எப்போதும் ஒரு எண்ணத்தை உருவாக்குவது, சமுதாயத்தை நெறிப்படுத்திச் செல்வது கலை இலக்கியமேயாகும். கலை வடிவங்கள் முதன்மையானவையாகும். ஆனால் இன்று கலை இலக்கியவாதிகள் ஒரு மாயையில் உள்ளனர். பழமையில் இருந்து புதுமைக்கு வரமுடியாதுள்ளனர்.

உண்மையில் இவர்கள் விடுதலைப் போராட்டம் வளரும்பொழுது கருத்தை உள்வாங்கிக் கொள்ளாதவர்களாவார்கள். இவர்கள் தங்களின் பெயரைக் காப்பாற்றிக்கொள்ளவும், எம்மிடமிருந்து சலுகைகளைப் பெறவும், தங்களுடைய எழுத்தை விற்கின்றார்கள். எனவே இவர்கள் தமது கதைகளில் கலக்கின்றனர்.



## சமுதாயத்தை நெறிப்படுத்துவது

# கலை இலக்கியமே

அதாவது கதைகளில் இராணுவம் இருக்கும், போராளிகள் இருப்பர். ஆனால் கருத்துக்கள் விடுதலைப் போராட்டத்தில் மக்களை இணைப்பதாக இருக்கமாட்டாது. இவர்களின் எழுத்துக்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும். ஆனால் போராட்டத்தை மையமாகக் கொண்டது என விளம்பரம் செய்துவிடுவார்கள். இவர்களால் போராட்டத்தைப் பற்றியோ போராளியைப்பற்றியோ எழுதிவிடமுடியாது.

பல சந்தர்பங்களில் புதிய அறிமுக எழுத்தாளர்களின் ஆக்கங்களில் கருத்தும் கொள்கையும் ஆணித்தரமாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை நான் அவதானித்துள்ளேன். உண்மையில் எமது பழைய பெருமைமிக்க எழுத்தாளர்கள் கூட இவ்வாறான கருத்தைக் கூறியதில்லை. அவர்களின் எழுத்துக்கள் நழுவல் தன்மையுடையவையாகவும் பிரச்சினையை அல்லது கருத்தைப் பூசி மெழுகி விடுவதுமாகவே இருக்கும். எமது வெளியீடான "வெளிச்சம்" சஞ்சிகைக்கு பல ஆக்கங்கள் வருகின்றன. எழுத்துக்கள் தரமானதாகவும் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாகவும் இருந்தால் அவை நிச்சயம் பிரசுரிக்கப்படும். அறிமுகமானவர்களின் கதைகளை மட்டும் நாம் பிரசுரிப்பதில்லை. ஏனெனில் எமது போராட்டம் குறுகிய எல்லைக்குள் நிற்காது. வெளிச்சம் சஞ்சிகையின் நோக்கங்களில் ஒன்று அறிமுக எழுத்தாளர்களை ஊக்குவித்தலுமாகும்.

கலை இலக்கியங்களினால் எமது போராட்டத்தை வளர்க்கமுடியும். இதை பழையவர்களால் செய்யமுடியாது. தமது வாழ்க்கையில் போராட்டக் கடமையைச் செய்யாதவர்கள் இலக்கியவாதிகள் என சொல்லப்படுகிறார்கள். இவர்கள் மனத்தைக் கிளுகிளுப்பாக வைத்திருப்பதற்காக எழுதுகின்றார்கள். இவ்வாறானவையே தென்னிந்தியத் திரைப்படங்களுமாகும். இவை வாழ்க்கைக்கு-நடைமுறைக்கு ஒத்து வரா.

இங்குள்ள கலை இலக்கியங்கள் எமது போராட்டத்தைப் போதியளவிற்கு ஆவணப்படுத்தவில்லை. தேசத்தின் நிகழ்வுகளை காவியமாகவோ கதையாகவோ எழுதினால் அவை காலம்காலமாகப் பேணப்படும். பரம்பரை பரம்பரையாகப் பேசப்படும். எமது எழுத்துக்கள் சமகாலத்தை மக்களுக்குப் புரியவைக்க வேண்டும். மக்களால் புரிந்துகொள்ள முடியாத சிக்கலான விடயங்களை இதமாகத் தெளிவாக்கவேண்டும்.

இன்று மக்கள் மனதிலே நிறைந்து நிற்பவை சோககாவியங்களே! தமிழீழத்தில் இன்று மிகப்பெரும்பாலான நிகழ்வுகளின் பின்னணியில் சோகமும் வேதனையுமே உள்ளன. இவற்றை எழுதும்போது அதன் பின்னணியில் சிங்கள அரசு எம்மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட அனைத்து அழுத்தங்களைப் பற்றியும் மக்கள் விளங்கிக் கொள்வார்கள். மக்கள் எழுச்சி அடைவார்கள். சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கு எதிராகப் போர் தொடுப்பார்கள். இன்றைய எழுத்துக்கள் பெருமளவிற்கு இந்நோக்கில் அமையவில்லை. மரணங்கள் வெறுமனே பட்டியல்களாகவே இருக்கின்றன. இவை ஆவணப்படுத்தப்படவேண்டும். அடுத்த தலைமுறையினர் இவற்றை படிக்கும்போது போராட்டத்தைப் புரிந்துகொள்வார்கள்.

நாம் கதைகளை எழுதும்போது பெரும்பாலும் ஒரு போராளியை மையமாகக் கொண்டே எழுதுகின்றோம். இது பச்சைப் பிரச்சாரமாகவே அமையும். மக்கள் விடுதலையை நோக்கி ஈடுபடமாட்டார்கள். இவ்வாறான படைப்புகள் வரவேற்பைப்பெறாது.

ஒரு போராளியின் வாழ்க்கைக் குறிப்பை எழுதும்போது வாசகர்கள் உணர்வு பெறக்கூடிய வகையில் எழுதவேண்டும்.

கே. மகேந்திரராஜா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## இனியும் ஒருகால் எனக்கொரு பிறப்புண்டோ சொல்

ஊருக்கு ஒருநாள்
திரும்பும் போது
என்னோடு உறவாடிய
உறவுகளை
கண்தேடி பனிக்கும்.

என்தம்பியைத் தாலாட்ட
ஏணைச்சீலை கட்டி ஆட்டிய
கூரைமுகடு கருகிச்
சாம்பல் பூத்துக் கிடக்கும்.

அமைதி காக்க என வந்தவர்கள்
என் அப்பாவின் வாழ்க்கையை
அடக்கம் செய்துவிட்டு
சென்ற துயர் நெஞ்சை அடைக்கும்.

குண்டுகள் சிதைத்த
சுவரின் குழிகளுள்ளும்
பறவைக் குஞ்சுகள்
சிறகசைக்கும்.
மெலிந்தன யாவும்
வலிய பகை எதிர்க்க
எழுந்தொரு போர்க்குணம் கொள்ளும்.

எனக்கேதும் நடந்தால்
எனக்கடந்த கால்கள்
என் பூமி மிதிக்கக் கூசும்.

என்பிள்ளை வருவான்
வருவான் எனக் காத்திருந்து
பூத்த கண்களுடன்
அம்மா என்னை
யார் மகனே என்பாள்.

அப்போ இன்னொரு மண்ணில்
அந்நியமாய் ஆனதுபோல்
என் ஆவியொடுங்கும்.

மண்ணுக்கென வாழா வாழ்வும்
தேசக்கடனாற்றாச் செயலும்
என்னை நின்று நின்று கொல்ல

மண்ணுக்கென எழ
இனியும் ஒருகால்
பிறப்புண்டோ சொல்!

சுபா

## வேண்டும் நமக்கு மனமாற்றம்



ஆண்டான் அடிமை என்று ஆண்டாண்டு பேசிப் பெண்களை அடுக்களைக்குள்ளேயே அகப்பையை கையில் திணித்து களித்திருந்தது நம் மனித சமூகம். பின் இச்சமூகம் மேடைபோட்டு பெண்ணடிமை பேசி வெறும் வாய்வித்தகராக பவனி வந்து கொண்டிருந்தது. வளையல் அணியும் "கை" துப்பாக்கி தூக்கியதும் "கொலுசு" பூணவேண்டிய அந்த பாதம் கொடும் சேற்றிலும் சகதியிலும் நடப்பதன் காரணம் எல்லோர்க்கும் தெரிந்த ஒன்றுதான். தெரிந்தும் தெரியாததுபோல் நாம் நடிப்பதில் என்ன பயன். "வாழ்க்கை என்பது சகல சந்தோசங்களையும் உள்ளடக்கியது மட்டுமல்ல அனைத்து துக்கங்களையும் உள்ளடக்கியதுதான்" நம் தேசத்தின் எல்லையை காக்கும் அந்த யுவதியின் விழிகள் எதிரியை நோக்கியே விழித்த வண்ணம் இருக்கின்றதே. அவள் கண் அயர்ந்து கண்மூடினால் நம் தேசம் கண் இமைக்கும் பொழுதில் பாசிசக் கரங்களிடம் போய் விடுமே. துப்பாக்கி எதிரி துவண்டோடிய பின்புதானே அவ் நங்கைக்கு தூக்கம் வரும். அவள் விழித்திருப்பது காதலனின் வரவுக்காகவா? இல்லை இல்லை. தமிழன்னை மீது மாற்றானின் பாதம் பதியக்கூடாது என்பதற்காகத்தானே. இவற்றையெல்லாம் ஏன் நாம் ஆழமாக சிந்திக்கக்கூடாது. காலப்பெட்டகத்தில் காப்பாற்றிவைத்த அத்தனை திரவியங்களையும் இழந்து, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கடலையும் தாண்டி வந்த எம்மையும் காலம் என்றோ ஒருநாள் போராட்டத்தில் இறக்கியே தீரும். நாய்கூட அடிக்கு மேல் அடித்தால் குரைக்கிறது, திரும்பக் கடிக்க வருகிறது. அது உயிர்ப் போராட்டம். தற்காப்பு முயற்சி. அதேபோல், தன்னைக் காத்துக்கொள்ள முடியாத மனிதனும் மனித இனமும் உலகில் பூண்டற்று போய்விடுகின்றார்கள். இது வரலாற்று உண்மை.

ஒருமித்த கருத்துக்கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களிடமிருந்து புறப்படும் ஓர் நல்ல சிந்தனை தெளிவான நோக்கம்கொண்ட தலைவனின் சிந்தனையுடன் இணையும்போது தலைவனுக்கும் நாட்டுக்கும் வலிமை சேர்கிறது. இவ்வலிமையானது சிலநேரங்களில் கற்பனைக்கெட்டாத சாதனைகளை நிகழ்த்த ஏதுவாக இருக்கின்றது. ஆம்! விடியும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்கள்தான், ஆயினும் சூரியோதயத்திற்கு காத்திருக்கும் அவகாசமே இல்லாதபோது என்ன செய்வோம். கடல் கடந்து வாழும் நாம் எல்லோரும் எம் மனங்களை களத்தை நோக்கி ஒரு வழிப்படுத்தி தேசமீட்பு போராட்டத்திற்கு ஏதோ ஒரு பங்களிப்பு செய்தேயாக வேண்டும். ஆதலால் வேண்டும் நமக்கு மன மாற்றம்.

புனிதன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**அண்மையில் தமிழீழம் சென்று திரும்பிவந்த தமிழீழ மகன் ஒருவர் தமக்கு நேர்ந்த அனுபவத்தை எம்மிடம் வந்து பகிர்ந்துகொண்டபோது.**

# தி ரு ம் பி ப் போ

தூரே வெடிகுண்டு ஒலிக
ளும், அதிர்வுகளுமாய் இருந்தது.
புகை மண்டி எழுந்து பரவியிருந்
தது. அதனால் வானம் தெளிவற்
றிருந்தது. அவலமான குரல்க
ளும், அவசரம் நிறைந்த நகர்வு
களும் காதில் இன்னமும் ஒலித்
துக்கொண்டே இருந்தன. அந்தச்
சிறுமி அடிக்கடி வரும் வழியை
திரும்பித் திரும்பி பார்த்துக்
கொண்டு வந்த வண்ணமாக
இருந்தாள். அவளுக்குள் -
தொலைத்த தனது விளையாட்டுப்
பொருட்களை தேடுகின்ற துடிப்பை
ஒத்த ஒருவித துடிப்பு. தாயாரின்
கையைப் பிடித்துக்கொண்டு நின்
றுகொண்டிருந்தாள்.

பெரிய தடை - வழி எதிரே
இருந்தது. தோளில் இயந்திரத்
துப்பாக்கிகள்; இறந்தவர்களின்
கண்களைப் போல இருந்த கண்
களுடன் சில இராணுவத்தினர்
நின்றுகொண்டிருந்தார்கள். சிறுமி
யின் தாயாரிடம் இராணுவத்தினன்
"எங்கே போகிறீர்கள் எனக் கேட்
டான்" தாயோ கொழும்புக்கு
போகின்றோம் என்றாள். சிறுமி
யைப் பார்த்து நையாண்டியாகச்
சிரித்தபடி ஒரு பாட்டுப்
பாடுங்கோ? என்று கேட்டான்.
இராணுவத்தினர் எல்லோரும்
ஆவலோடு கேட்பதற்கு தயாராய்
இருந்தார்கள். தாய்க்கு ஒரே
பயம். ஐயோ பிள்ளை..... எந்தப்
பாட்டைப் பாடுமோ... இதென்
னடா ஆபத்தாப் போச்சு.....
முன்கூட்டியே நான் பிள்ளைக்கு
ஒன்றும் சொல்லி வைக்கேல்ல....
என்று பயந்து கொண்டிருந்தாள்.
இராணுவத்தினன் பாடுங்கோ
என்று திரும்பக் கேட்டதும் எங்கள்
பூமியில் ஒரு சிறு தணல் கீற்றென
திரிந்த எம் தேசத்துச் சிறுமி

**இந்த மண்**
**எங்களின் சொந்த மண்.**
**இதன் எல்லையை மீறி**
**யார் வந்தவன்?**


என்ற பாடலைப் பாடினாள். மரங்
கள் காற்றுக்காடின, மண்துகள்
களைச் சுமந்த காற்று வீதியில்
சூறாவளியாய் சுழன்றடித்தது.
இராணுவத்தினன் சீறும் பார்வை
யோடு அந்தச் சிறுமியின் தாய்தந்
தையரையும் சிறுமியையும் பார்த்து
வெறிபிடித்தவனைப்போல் "திரும்
பிப் போ" என்று சிங்களத்தில் கத்
தினான்.

அந்தச் சிறுமி தாயின்
கைகளைப் பிடித்துக்கொண்டு
நடந்துகொண்டிருந்தாள். முகம்
சிவந்த மாலைச் சூரியக்கதிர்கள்
தமிழீழ வானில் தெளிவாகத்
தெரிந்துகொண்டிருந்தன. அந்தச்
சிறுமி நடந்து கொண்டிருக்கும்
போது அவள் ஒலித்த **இந்த
மண் எங்களின் சொந்த
மண்** என்ற அந்தப்பாடலின்
வரிகள் காற்றில் கலந்து பலமாக
ஒலிப்பது போன்ற பிரமையோடு
அங்கு கூடிநின்றவர்கள் நின்றுகொ
ண்டிருந்தார்கள். ●

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இங்கே வெட்டவும்




# குறுக்கெழுத்துப் போட்டி இல. 1

## மேலிருந்து கீழ்

1) உலகத்தில் முதன் முதலாக உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை அழித்துக்கொண்ட அன்னையர் திலகம்.?
3) யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி தமிழ் மன்னன் சிறைபடக் காரணமாக இருந்த ஓர் எட்டப்பன்?
4) தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்க்கமுடியாது என்று பத்திரிகையில் அறிக்கை விட்ட தமிழ் அமைச்சர்? (கீழிருந்துமேல்)
6) வடமாகாணத்தில் வெற்றிகரமாக செய்யக்கூடிய கைத்தொழிலில் இதுவும் ஒன்று?
8) தமிழீழத்தில் வெளியாகும் பத்திரிகைகளில் இதுவும் ஒன்று? (கீழிருந்துமேல்)
10) ஐரோப்பாவில் தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கி வரும் பத்திரிகை
12) புலிகளின் தாகம் தமிழீழத் ........
13) எமது மண்ணின் விடுதலை ஒளிக்கீற்றுக்களைச் சுமந்துவரும் வீடியோப் பத்திரிகை? (தலைகீழாயுள்ளது)

## இடமிருந்து வலம்

2) "மக்கள் புரட்சி வெடிக்கட்டும். மக்களுக்காக மரணிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்" எனக்கூறி உண்ணாவிரதம் இருந்து வீரமரணத்தை தழுவிக்கொண்ட ஓர் வேங்கை?
5) ஈழமண்ணில் சிற்பக்கலைக்கூடம் ஆரம்பிக்க மூலகாரணமாக இருந்த மாவீரர்?
7) பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளில் முக்கிய இடம்பெறும் நிறுவனம்?
9) தமிழீழ மண்ணின் சிறுவர் பராமரிப்பு நிலையம்.....
11) வெளிநாட்டில் வாழும் நான் ஓர்......

நிபந்தனை: 1) விடைகள் வந்துசேரவேண்டிய கடைசித் திகதி 30.09.1992 ஆகும்.
2) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

குறிப்பு: இப்போட்டியில் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி வெற்றிபெறும் முதல் மூவருக்கு எமது எரிமலை இதழ், முறையே ஒரு வருடத்திற்கு, ஆறு மாதங்களுக்கு, மூன்று மாதங்களுக்கு பரிசாக அனுப்பிவைக்கப்படும்.

- ஆசிரியர் குழு -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**வாசகர் கடிதப் பகுதி**



# அக்கரைப்பூக்கள்

## எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!

நான் ஆறு, ஏழு வருடங்களாகத் தொடர்ந்து எரிமலை இதழைப் படித்து வருகின்றேன். இதழ், வரவரப் புதுப் புது அம்சங்களும் புதுப் பொலிவும் பெற்று வருகின்றது. பத்திரிகை உலகில் அநீதிகளை எரிக்கும் எரிமலையாக தொடர்ந்து வெளிவர எனது நல்லாசிகள்.

பொன். அருள்ஜோதி,
சுவிஸ்.

## எரிமலை ஆசிரியருக்கு!

1983 நடுப்பகுதியில் தங்குமிட, வேலைப்பிரச்சனைகளால் பாரிசைவிட்டு ஜேர்மனி வந்துவிட்டேன். எரிமலையை கையெழுத்துப் பிரதியாக் தரிசித்தவன் பத்துவருட இடைவெளியின் பின் 1992 தையிலிருந்து மாதாமாதம் எரிமலை கிடைக்கப்பெறுகின்றேன். எரிமலையின் வளர்ச்சி கண்டு மனம் பூரிக்கின்றேன். ஓர் இனத்தின் விடுதலையில் பேனாவின் பங்களிப்பை பூரணமாக ஆற்றிவரும் எரிமலையை மனமார வாழ்ததுகின்றேன்.

க. அரியநாயகம்,
ஜேர்மனி.

## எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

எரிமலையை தொடர்ந்து வாசித்துவரும் அக்கறையுள்ள வாசகன் நான். தரம் திருப்திகரமாக உள்ளது. எனினும் மேலும் வளர்ச்சிபெற என் வாழ்த்துக்கள். தமிழீழ விடுதலைக்கெனப் போராட முனைந்து ஏனைய குழுக்களில் இணைந்துகொண்ட இளைஞர்கள் பலர் இன்று தலைமைகளின் பிழைகளை உணர்ந்து வெளியேறியுள்ளனர். அவர்களையும் போராட்டத்தில் உண்மையான தலைமையின் வழிகாட்டலில் செயற்படத்தூண்டும் விதத்தில் எரிமலையில் ஆக்கங்கள் வெளிவர வேண்டும்.

அருண்,
பாரிஸ்.

## அன்பின் எரிமலைக்கு!

எரிமலையை தவறாது படிக்கும் வாசகிகளில் நானும் ஒருத்தி. ஈழமண்ணையும் விடுதலை உணர்வுகளையும் வெளியே கக்கும் ஓர் அற்புத இதழ் எரிமலை. ஆடிமாத இதழ் பார்த்தேன். 'அந்நியமண்ணில் அகதிவாழ்க்கை தொடரக்கூடாது எனபதற்காக படிப்பினைகளைப் பதிவு செய்வோம்.' என்னும் கட்டுரை படித்தேன். அந்நிய வாழ்வின் அனர்த்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும் என்பது உண்மையே. வரவேற்கப்படவேண்டிய நல்ல கருத்து. எனினும் எமது மண்ணின் இன்றைய வாழ்க்கைத் துயரங்களில் பங்கெடுக்காமல் கவிதைகள் எம்மால் எப்படி வெளிக்கொணரமுடியும்? படைக்க முடியும்? என்ற கேள்வி அதில் எழுப்பப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வாழ்வோர் (ஒருசிலரைத தவிர அவர்களுக்கு இது பொருத்தமற்ற கட்டுரை.) எல்லோரிடமும் எமது மண்ணின் தாக்கம் உள்ளது. முற்றிலும் மாறுபட்ட சூழலில் வாழ நேரிட்டாலும் தாயக உணர்வுகளை மறந்து, துன்ப, துயரங்களில் பங்கெடுக்காது, தொடர்புகள் துண்டிக்கப்பட்டு வாழவில்லை. இங்கு வாழும் ஒவ்வொரு குடும்பத்தினரில் யாரோ ஒரு அங்கத்தினர் மூலமாக துன்பங்கள், துயரங்கள் பகிரப்படுகின்றன. கடிதங்கள், தொலைபேசிகள், அங்கிருந்து வருவோர் கொண்டுவரும் செய்திகள் இன்னும் எத்தனையோ சாதனங்கள் அவர்கள் வாழ்வின் துன்ப, துயரங்களை எமக்குக் காட்டுகின்றன. உதாரணமாக ஈழமண்ணில் ஏதோ ஒரு இடத்தில் தான் ஈழமக்கள் நாய்கள் பிணத்தைத் தின்னும் காட்சியைக் கண்டிருப்பார்கள். அக்காட்சியை வெளிநாட்டில் வாழும் குடும்பங்களில் பார்க்காதவர்கள் இல்லையென்றே கூறலாம். அக்காட்சியை காணும் கவிஞனின் உள்ளத்தில் ஏதும் உணர்ச்சிகள் எழும்பாதா? பனிக்கட்டிகள் சூழ்ந்த நாட்டில் வாழ்ந்தாலும் கவிஞனின் உண்மை உணர்வுகள் எரிமலைக் குழம்பாக தோற்றம் பெறுமே தவிர பனிக்கட்டியாக உறைந்துபோய் இருக்காது.

திருமதி. ஆன் பிரான்சிஸ்,
ஜேர்மனி.

## அன்புடையீர் வணக்கம்.

தங்கள் வெளியீடுகளை படித்தேன்; தொடர்ந்து படிக்க ஆவலாக உள்ளேன். அவசியம் அனுப்பி வைக்கவும்.

மற்றும் போராட்டத்தைப் பற்றியதும், விடுதலைப் புலிகளைப்பற்றியதுமான வேறு வெளியீடுகளையும் உடன் அனுப்புமாறு வேண்டுகின்றேன்.

அ. பாலு,
தமிழ்நாடு.

## அன்புடையீர்! வணக்கம்!

தங்கள் தாய்மண் வெளியீடான 'எரிமலை' என்ற தன்மான இதழ் கண்டேன். புலிகளைப் பற்றிப்பொய்ச் செய்திகளையே புளுகிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளுக்கிடையில், தங்களது 'எரிமலை' எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.
ஈழ வரலாற்றினையும், தமிழனின் வீர வரலாற்றினையும் அறிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். எனவே 'எரிமலை'யை எனக்கு அனுப்புங்கள். சந்தா விபரங்கள் போன்றவற்றைத் தெரியப்படுத்துங்கள்.

அன்புடன்
மு. லதா,
தமிழ்நாடு.

## தோழருக்கு வணக்கம்!

நான் ஈழவிடுதலையில் அதிகம் ஈடுபாடுகொண்டவன். 'களத்தில்' பத்திரிகையும் எனக்குக் கிடைக்குமாறு செய்யப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.
சந்தாத் தொகையை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பா. சாந்தகுமார்,
தமிழ்நாடு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அல்லலுறும் தீவகம்

கடந்த ஐப்பசி 1992 காலப்பகுதியிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தீவகம், இன்று சுதந்திரமான வெளித்தொடர்புகளற்று மூடிமறைக்கப்பட்டுள்ளது. இன்று தீவுப்பகுதிகள் எங்கும் உடைந்த கட்டிடங்கள், நொருங்கிய வாகன வகைகள், மன நோயாளிகளான மக்கள், கவனிப்பாரற்ற கால்நடைகள் என காட்சியளிக்கின்றது. இராணுவத்தின் ஊடுருவல் நகர்வுகளை முன்கூட்டியே அறிந்து கொண்ட தீவக மக்களில் பெரும்பாலானோர் (இளைஞர்கள், யுவதிகள், உடல்வலுமிக்கோர்) வெளியேறியதும், மீதம் ஒரு குறிப்பிட்ட தொகையினர் இராணுவத்தின் பிடியில் சிக்கிக் கொண்டதும் அன்றிலிருந்து இன்றுவரை அம்மக்களின் துயரம் தோய்ந்த மரண வாழ்வு மூடி மறைக்கப்பட்டு வருகின்றது.



ஊர்காவற்துறையில் 74 ஆயிரம் மக்கள் முன்னர் வசித்தனர். தற்போது 466பேரே வசிக்கின்றனர். இவ்வாறே புங்குடுதீவில் 12 ஆயிரம் பேரில் 687 பேரும், மண்டைதீவில் 2000 பேரில் 40 பேரும், காரைநகரில் 45 ஆயிரம் பேரில் 757 பேரும், எழுவைதீவில் 575 பேரில் 43 பேரும், அனலைதீவில் 3905 பேரில் 3263 பேரும், நயினாதீவில் 5217 பேரில் 3117 பேருமே வசிக்கின்றனர். இவ்வாறு சிறைப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் உடல் நலம் குன்றிய வயோதிபர்கள், குடும்ப உறவுகளைப் பிரிந்து தவிக்கும் குடும்பஸ்தர்கள் போன்றோராகும்.

இம்மக்களுக்கான அடிப்படை மருத்துவ வசதிகள், உணவு விநியோகம், சிறுதொழில் முயற்சிகள் அறவே அற்ற நிலையில், தொழில்வாய்ப்பின்மை, பணப்புழக்கமின்மையால் சிங்கள இராணுவத்திடம் கையேந்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகள் யாவும் பாரிய இராணுவ முகாம்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழுகின்ற மக்கள் அனுபவிக்கும் கொடும் சிறை வாழ்க்கையை மூடிமறைத்து ஒரு போலியான அமைதியை நிலைநாட்ட அரச பிரச்சார சாதனங்களும், துரோகக் குழுக்களும் பெரு முயற்சியில் இறங்கியுள்ளன.

இதுவரை பல வயோதிபர்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில் அடிப்படை உணவு, மருந்துகளற்ற நிலையில் அநாதைகளாகச் செத்து மடிந்துள்ளனர். மேலும் பலர் மனநோயாளிகளாக வீதிகளில் அலைவதாகவும் அங்கிருந்து தப்பிவந்தவர்கள் மூலம் அறியப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு யாழ் கோட்டை மீட்புப் போரின் போது மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவம் பொது இடங்களில் தஞ்சம் அடைந்திருந்த பல அப்பாவிப் பொது மக்களை வெட்டிப் படுகொலை செய்து கிணறுகளை நிரப்பி வஞ்சம் தீர்த்த நிகழ்வானது தீவக மக்களின் இடம் பெயர்வுகளை தீவிரப்படுத்தியது.

இன்று அந்த மக்கள் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் தஞ்சம் அடைந்துள்ளார்கள். இன்று குடும்பங்களைப் பிரிந்து தனிமைப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்களுடனான எதுவித தொடர்புகளும் அற்ற நிலையில், சிலகுடும்பங்களை மனிதநேய அடிப்படையில் இணைப்பதற்கு செஞ்சிலுவைச் சங்கம் எடுத்த முயற்சியும் பயனளிக்காது போயுள்ளது.

தீவகத்தில் வாழும் மக்கள் தமது உறவினர்களுக்கு எழுதும் கடிதங்கள் யாவும் கூலிக்குழுக்களினால் பரிசீலிக்கப்பட்டு உண்மைக்குப் புறம்பான நிலைமைகளை மூடிமறைத்து எழுதுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு அஞ்சல் செய்யப்படுகின்றன. இடம் பெயர்ந்த உறவினர்களை மீள வருமாறு ஊக்குவிப்பதற்கும் அரச கூலிக் குழுக்களால் பெருமுயற்சி செய்யப்படுகின்றன. கடந்த மாசி மாதம் தாயொருவர் பிரசவத்திற்காக யாழ் கொண்டுவரவேண்டியிருந்தபோது அவரது 2 வயது குழந்தையை தாயுடன் செல்ல இராணுவத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டது.

இன்னொரு குடும்பத்தில், தாயாரின் திடீர் மறைவுக்குப் பின் தனிமைப்பட்டுவிட்ட தனது வயதான சகோதரியை மீட்டெடுக்க அப்பெண்ணின் சகோதரர் 2 1/2 இலட்சம் ரூபா துரோகக் குழுக்களில் ஒன்றுக்குச் செலுத்தி கொழும்புக்கு கொண்டு வந்த நிகழ்வும் நடந்தேறியுள்ளது. இப்பெண்ணின் தாயார் படுத்த படுக்கையில் மர்மமான முறையில் இறந்தமையும் பத்திரிகைகள் வாயிலாக பிள்ளைகளால் நினைவு கூரப்பட்டுள்ளது.

இவைதான் இன்று தீவகத்தில் சிறைப்பட்டுள்ள மக்கள் அனுபவிக்கும் சுதந்திரம். இப்படியான அடிப்படைச் சுதந்திரங்களற்ற, அணுவணுவாகச் செத்து மடிந்துகொண்டிருக்கும் அம்மக்களின் அழிவுக்கு வழிகோலும் கொடுமைக்காரர்களிடம் இருந்து அம்மக்களை விடுவித்து மறுவாழ்வளிக்க அனைத்து மனித உரிமை அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் தலையிட வேண்டும் என்பதே அம்மக்களின் அவலக்குரலாகும். ●


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கடற்புலிகள்

லங்கா இராணுவம் தமிழீழ நிலப்பகுதிகளில் பாரிய இழப்பை எதிர்நோக்கிவரும் அதேவேளை கடற்புலிகளின் தந்திரோபாயம் மிக்க தாக்குதல்களால் தமிழீழக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையும் பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது.

10. 07. 1990 அன்று இரவு வேளை தமிழீழக் கடற்பரப்பில் நின்ற எதிரிப்படைக் கப்பலை கடற்புலிகளான மேஜர் காந்தருபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோரின் கரும்புலித் தாக்குதல் நடவடிக்கை முதன் முதலாக கடற்படையினரின் கடற் பரப்பு மீதான ஆதிக்கத்திற்கு பெரும் சவாலாய் அமைந்தது.









இத்தாக்குதலினால் கடற் படையினரின் ரோந்து நடவடிக்கைகளும், விநியோக செயற்பாடுகளும் கேள்விக்குறியாயின.

மேலும் ஒருபடி வளர்ச்சியாக கடற்புலிகளினால், ஸ்ரீலங்கா கடற்படையினரின் விசைப்படகு ஒன்று 91ம் ஆண்டு மார்கழி மாதத்தின் இறுதி வாரத்தில் வழிமறித்துத் தாக்கி மூழ்கடிக்கப் பட்டது. ஏனைய படகுகள் தப்பி ஓடின. அவுட் மோட்டரும், ஆயுதங்களும் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து மீட்கப்பட்டன. கடற்பரப்பிலும் கூட வழிமறித்து மோதக் கூடிய வலிமையை கடற்புலிகள் பெற்றுவிட்டதை இந்நிகழ்வு சுட்டிக்காட்டியது. பூநகரியிலிருந்து ஆனையிறவை நோக்கிச் சென்று கொண்டிருந்த 41 அடி நீளமான அதிவேகப் படகு ஒன்று தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. இதிலிருந்த கடற்படையினரும் பலியாகினார்கள். நீண்ட கடல் எல்லையைக் கொண்டுள்ள தமிழீழ தேசத்தின் மீது வலிமையான தாக்குதல்களைத் தொடுக்க ஸ்ரீலங்கா அரசு தனது கடற்படையையே நம்பியிருந்தது. கடற்பரப்பில் தாமே வலிமையானவர்கள் என எண்ணியிருந்தனர்.

பாரிய கடற்படைப் படகுகள் மீது கரும்புலித் தாக்குதல்களாக ஆரம்பித்து, மிகக் குறுகிய காலத்திற்குள் கடற்பரப்பில் கடற்படையினரின் விசைப்படகுகளைத் தாக்கி அழிக்கக்கூடிய அளவிற்கு கடற்புலிகள் பலம்பெற்று வருகிறார்கள்.

'கடற்புலிகள்' என்ற பெயர் கடற்படையினர் மத்தியில் -ஏன் ஸ்ரீலங்காவிலேயே மரண பயத்தையும் தமக்கு கிடைத்துவரும் பின்னடைவுகளையும் குறிப்பதாக மாறிவருகின்றது. மாறாக தமிழீழ தேசத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மேலும் ஒருபடி முன்னேற்றத்தையும் புதிய நம்பிக்கையையும் குறித்து நிற்கின்றது.

கடற்புலிகளின் மகளிர்ப்படைப் பிரிவு செல்வி. நளாயினி பொறுப்பில் இயங்கி வருவதும் பல நூற்றுக்கணக்கான பெண்கள் இதில் இணைந்து பயிற்சிபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## பின் அட்டைப்படக் கவிதை



இவர்கள்
புதியதோர் சந்ததியின்
விருட்ச வேர்கள்.

பொட்டிட்டு பூ முடிச்சு
கண்ணாலே நிலமளந்து
அடிமேல் அடிபதித்து
நிமிராமல் நடந்தவர் மத்தியில்
நிமிர்ந்து நிற்பவர்கள்.

வேலி அடைப்புக்குள் ஒடுங்கிய
முற்றத்து நிலவில்
கனவுகளை விதைத்து விட்டு
அடுக்களை நடுவே
அடங்கிக் கிடந்தவர் மத்தியில்
அட்டதிக்கும் அதிர
எழுந்து நிற்கும்.

புரட்சிப் பெண்கள்
கட்டிய கணவன்
கல்லானாலும் புல்லானாலும்
பாதம் தொட்டு பணிவிடை செய்து
அவித்துப் போட்டு பிள்ளை பெறுதலுமான
சங்கிலித் தொடர் அறுத்து
பண்பாட்டு போர்வையில்
பூட்டிய விலங்குடைத்து
தேசத்தின் தெருக்களில்
காவல் வீரர்களாய்
ஊர்வலம் வருபவர்கள்

இவர்கள்
முகம் தெரியாத இராசகுமாரர்களுக்காக
சுயம்வரக் கனவுகளில் காத்திராமல்
சிதைந்த எமது தேசத்தை
புதிதாய் செதுக்கும்
சுதந்திரச் சிற்பிகள்.

- ராஜ் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com